# செம்மண்

நிலம் 3 துகள் 113 வள்ளுவர் ஆண்டு 2052, 17 - 23 புரட்டாதி 2022 வாரமலர் பக்கங்கள் 28


# பெற்றோல், டீசல் இறக்குமதியில் அரசு தொடர்ந்தும் தள்ளாட்டம்

## பல நாட்கள் தாமதத்திற்குப் பின்னர் வெள்ளிக்கிழமை ஒரு தொகுதி இறங்கியது



பொருளாதார நெருக்கடி தொடங்கியதைத் தொடர்ந்து பெற்றோல், டீசல் இறக்குமதியில் அரசு அடைந்த பின்னடைவு இன்னும் சீராகவில்லை. எரிபொருள்களை இறக்குமதி செய்வதில் ஆட்சியாளர்கள் தொடர்ந்தும் நெருக்கடியைச் சந்தித்து வருகின்றனர். டொலரில் உடனடியாகப் பணத்தைச் செலுத்தவேண்டிய நெருக்கடியினால் கடந்த சில நாள்களாக துறைமுகத்திலிருந்து இறக்கப்படாமலிருந்த எரிபொருட்கள் வெள்ளிக்கிழமை காலை முதல் இறக்கப்படத் தொடங்கின.

இலங்கை தன்னால் கடன் கட்ட முடியாது என்று கடந்த சித்திரை மாதம் அறிவித்ததைத் தொடர்ந்து எரிபொருளைக் கடனுக்கு வழங்குவதற்கு எந்த நிறுவனமும் நாடும் தயாராக இல்லை.

பக்கம் 03

# மைத்திரிக்கு நீதிமன்றம் அழைப்பாணை

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான வழக்கில் முன்னாள் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை நீதிமன்றத்தில் நேரில் முற்படுமாறு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. கொழும்பு கோட்டை நீதிவான் மன்றினால் இந்த ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.


மைத்திரிபால சிறிசேன அடுத்த மாதம் 14ஆம் நாள் நீதிமன்றில் முற்படவேண்டும் என்று அந்த ஆணை கூறுகின்றது. உயிர்த்த ஞாயிறு தாக்குதலைத் தடுக்கத் தவறியதன் மூலம் மைத்திரிபால ஒரு குற்றவாளி என்று அறிவிக்கக்கோரி அருட்திரு சிறில் காமினி பெர்னா

பக்கம் 02

# மெனிக்கே மகே ஹித்தே இந்தி பதிப்பு வெளியானது

இலங்கைப்பாடகிஜொஹானி டி சில்வா பாடி உலகப் புகழ்பெற்ற மெனிக்கே மகே ஹித்தே பாடலின் இந்திப் பதிப்பு வெள்ளிக்கிழமை வெளியானது. இந்தி நடிகர் அஜய் தேவ்கான் நடிக்கும் படத்தில் இந்தப் பாடல் இடம்பெற்றுள்ளது. 'தாங் கோட்' எனப் பெயரி

பக்கம் 18













# வேலைக்காக தாஜ்சமுத்திராவில் அலைமோதிய மக்கள் கூட்டம்

கட்டார் ஏயார்வேஸ் நிறுவனம் வேலைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதாக அறிவித்ததைத் தொடர்ந்து பெரும் எண்ணிக்கையானவர்கள் வியாழக்கிழமை கொழும்பு தாஜ்சமுத்திரா சொகுசு விடுதியில் குவிந்தனர். இதனால் அங்கு பெரும் பரபரப்பு தொற்றிக்கொண்டது. இலங்கை பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கிக்கொண்டதைத் தொடர்ந்து பலரும் வேலை வாய்ப்புக்களை இழந்துள்ளனர். ஏற்கனவே கொரோனா பாதிப்பினால் வேலை இழப்பைச் சந்தித்து வந்த மக்கள் பொருளாதார நெருக்கடியினால் மேலும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் தனது பன்னாட்டு வான் சேவையை மேம்

பக்கம் 03

# பல்கலை மாணவர்களுக்கு பகுதி நேர வேலை வாய்ப்பு

## பெரதெனியவில் வருகிறது புதிய திட்டம்

பெரதெனியா பல்கலைக்கழகத்தில் மாணவர்களுக்கு பகுதி நேர வேலை வாய்ப்பை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுவருகின்றது. பயிற்சி மற்றும் வேலை அனுபவம் என்பவற்றை வழங்கும் வகையில் இந்தத் திட்டத்தைச் செயற்படுத்த உத்தேசிக்கப்படுவதாக பல்கலைக்கழக நிர்வாகம் தெரிவிக்கின்றது.

மாணவர்களுக்கு பல்கலைக்கழக வளாகத்திற்குள்ளேயே இந்த பகுதி நேர வேலை வாய்ப்பை

பக்கம் 18

செம்மண்
வாரப் பத்திரிகை
551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com
தொடர்பு எண்: 021 492 7781
உரிமை மற்றும் வெளியீடு: கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிட்
**ஆசிரியர்: தே.பிரேமானந்த்**

# நாடகங்களை நிறுத்துங்கள்

ஜெனிவாவில் இந்த முறை முன்வைக்கப்பட்டுள்ள தீர்மானத்தில் தமிழர்கள் எதிர்பார்த்த விடயங்கள் இல்லை என்கிற கூக்குரல்களைத் தமிழ் அரசியல் தரப்பில் கேட்கக் கூடியதாக இருக்கின்றது. ஜெனிவா வரும்போது அதைப் பரபரப்பாக்குவதும் பின்னர் அதில் ஒன்றுமில்லை என்று கூவுவதும் தமிழ் அரசியல் தலைவர்களுக்கும் தமிழ் ஊடகங்களுக்கும் வருடாந்தச் சேவையாக மாறிவிட்டது. இந்த முறையும் அதேதான்.

போர் முடிந்த கையோடு சிங்களம் வெற்றிக் களிப்போடு இருந்த நிலையில் தமிழர்கள் மேலும் பாதிக்கப்படாமல் இருப்பதையும் அவர்கள் இரண்டாம்தரக் குடிமக்களாக ஒடுக்கப்படாமல் இருப்பதையும் உறுதிப்படுத்தும் நிகழ்ச்சி நிரலுக்கு அப்பால் ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் பங்கு தமிழ் அரசியலில் காத்திரமான செல்வாக்கைச் செலுத்தாது. அதைத் தாண்டி சிங்களவர்களைத் தண்டிப்பதோ நிலைமாறு கால நீதியோ அல்லது பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கான நீதியோ ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கூடாகக் கிடைப்பது சாத்தியமற்றது அல்லது அதற்கு மிக நீண்ட காலம் எடுக்கும் என்பது எமது அரசியல்வாதிகளுக்குத் தெரியாததல்ல. ஆனாலும் அவர்கள் ஒவ்வொரு ஆண்டும் இந்தக் காலப் பகுதியில் அதை ஒரு அரசியல் காவடியாகத் தூக்கித் திரிவர். பின்னர் ஐ.நா. ஏமாற்றிவிட்டது என்று ஒரு நீலிக் கண்ணீரும் வடிப்பர். அதை மறுத்து ஐ.நாவுக்காகச் சிலர் வக்காலத்து வாங்கவும் செய்வர்.

இந்தத் தடவையும் அந்தக் காட்சிகளில் எந்த மாறுதல்களும் கிடையாது. வருடாந்தத் திருவிழாதான். அதற்காக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான தீர்மானங்கள் நிறைவேற்றப்படக்கூடாது என்பது எமது நிலைப்பாடல்ல. அது அதன்பாட்டுக்கு நடக்கட்டும். நாம் செய்யவேண்டியதைச் செய்வோம் என்பதைத்தான் கூற வருகின்றோம்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவைத் தீர்மானங்களால் இலங்கை அரசை ஒருபோதும் கட்டுப்படுத்த முடியாது என்று தெரிந்துகொண்டும், அது ஒரு அழுத்தக் குழுவாகச் செயற்படும் பொறிமுறையே என்பதை உணர்ந்துகொண்டும் அதை முன்வைத்து தமிழ் அரசியல்வாதிகள் தொடர்ந்தும் மக்களை ஏமாற்றிக்கொண்டிருப்பதைவிட்டு அடுத்த கட்டம் நோக்கி முன்னேறவேண்டும். இல்லையேல் அவர்களுக்கு அடுத்த கட்ட அரசியல் நகர்வை எப்படி மேற்கொள்வது என்று தெரியவில்லை என்று பொருள்படும்.

இதில் வேடிக்கை என்னவென்றால் தமிழ் அரசியல் தலைவர்கள் மட்டுமல்ல சிங்களத் தலைவர்களும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையை முன்வைத்து ஆடும் நாடகம்தான். அதில் கடைசி நாடகம் சில மாதங்களில் தமிழ்த் தலைவர்களுடன் பேசி இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பேன் என்று அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறியிருப்பது. ஜெனிவாவை முன்வைத்து தமிழர்களையும் உலக நாடுகளையும் ஏமாற்றும் சிங்கள நாடகம் இது என்பது பள்ளிப் பிள்ளைக்கும் புரியும். சிங்கள அரசியல் வரலாற்றை நன்குணர்ந்த எவருக்கும் தெரியும்.

எனவே இதுபோன்ற நாடகங்களை இரு தரப்பு அரசியல்வாதிகளுமே நிறுத்திவிட்டு மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உருப்படியான எதையாவது செய்வதற்கு முன்வரவேண்டும்.

# அமைச்சரவை விரிவாக்கத்தில் நாமலுக்கும் பதவி கிடைக்கும்

## *விரைவிலேயே பதவியேற்பு*



இலங்கையில் அனைத்துக் கட்சி ஆட்சி அமைக்கும் முயற்சிகள் தோல்வியில் முடிந்துள்ள நிலையில் இராஜாங்க அமைச்சர்கள் அண்மையில் நியமிக்கப்பட்டனர். அதைத் தொடர்ந்து அமைச்சரவையின் எண்ணிக்கையையும் இன்னும் அதிகரிக்கவுள்ளது. இதில் நாமல் ராஜபக்சவுக்கும் பதவி வழங்கப்படவுள்ளது.

இந்த வாரக் கடைசியில் அல்லது அடுத்த வாரம் நிச்சயம் அமைச்சரவை விரிவாக்கம் இருக்கும் என்று வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார். நாமலுக்கும் அமைச்சர் பதவி கிடைக்கலாம் என்பதையும் அவர் கோடிகாட்டினார்.

முன்னதாக, பொது ஜன பெரமுன மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற்றைச் சேர்ந்த பெரும்பாலானவர்களைக் கொண்ட 37 இராஜாங்க அமைச்சர்கள் நியமிக்கப்பட்டனர். அரசமைப்பின்படி அரச தலைவர் 30 அமைச்சர்களை நியமிக்க முடியும். ஏற்கனவே நியமிக்கப்பட்ட அமைச்சர்களுக்கு மேலதிகமாக வெற்றிடங்களை நிரப்பும் வகையில் இன்னும் சில அமைச்சரவை மதிப்புள்ள அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவுள்ளன.

நாடு தற்போது எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடி நிலையில் அமைச்சர்களின் எண்ணிக்கை விரிவாக்கப்படுவது நாட்டுக்கு மேலதிக பாரம் என்று கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையிலும் அமைச்சரவை விரிவாக்கம் நிச்சயம் இடம்பெறும் என்று ஆட்சித் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## மைத்திரிக்கு...

ண்டோ தாக்கல் செய்த மனுவை விசாரித்த நீதிவான் இந்த ஆணையைப் பிறப்பித்தார்.

நீதிக்கான தேசிய கிறிஸ்தவக் குழுவின் சார்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனுவில் மைத்திரிபால சிறிசேன -முதன்மைச் சந்தேகநபராகப் பெயரிடப்பட்டுள்ளார்.

# வடக்கு ஆளுநர் அலுவலகம் முன் கைதிகளின் உறவினர் போராட்டம்



கொழும்பு மகஸீன் சிறையில் பட்டினிப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அரசியல் கைதிகளின் உறவினர்கள் வெள்ளிக்கிழமை வடக்கு ஆளுநர் அலுவலகம் முன்பாகக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். மகஸீன் சிறையில் உள்ள 12 அரசியல் கைதிகளின் உறவினர்களே இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். 2017ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட இவர்கள் நீதிமன்றத்தில் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படாது பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களை விடுதலை செய்யவேண்டும் என்று அவர்கள் கோரிக்கை முன்வைத்தனர். தமது குழந்தைகளோடு வந்திருந்த பெண்களே இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். தமது கைகளில் பதா கைகளைத் தாங்கியிருந்த அவர்கள், சிறையில் அடைக்கப்பட்டுள்ள தமது உறவினர்களுக்கு நீதி கிடைக்கவேண்டும் என்று வலியுறுத்தினர்.

---

## பெற்றோல்...

அதனால் டொலரில் பணத்தைச் செலுத்திய பின்னரே எரிபொருளை இறக்குமதி செய்ய முடிகின்றது. இதனால் எரிபொருள் கப்பல்கள் கொழும்பை வந்தடைந்த பின்னரும் அதனை இறக்குவதற்கு நாட்கணக்கில் காத்திருக்க வேண்டியிருக்கிறது.

உள்ளூர் சில்லறை விற்பனையாளர்கள் தமது கொடுப் பனவுகளை டொலரில் செலுத்தவேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளதால், அதனை அவர்கள் தேடிப் பெறுவதற்கு ஏற்பட்ட கால தாமதம் காரணமாக கடந்த சில தினங்களாக எரிபொருள் இறக்குமதி தாமதமடைந்ததாக துறைசார் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தத் தாமதத்திற்குப் பின்னர் டீசல் கப்பல் உட்பட 4 கப் பல்களில் இருந்து எரிபொருள்கள் இறக்கப்படத் தொடங்கியிருப்பதாக மின் மற்றும் சக்தி வலுத்துறை அமைச்சைச் சேர்ந்த அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இந்தக் கப்பல்களில் மசகு எண்ணெய்க் கப்பல் ஒன்று ஆவணி (ஓகஸ்ட்) மாதம் 23ஆம் திகதி முதல், பணம் செலுத்தப் படாததால் துறைமுகத்திலேயே காத்திருந்தன. அதேநேரம் புரட்டாதி (செப்டெம்பர்) 4 மற்றும் 7ஆம் நாள்களிலும் இரு டீசல் கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தன. புரட்டாதி 14ஆம் நாள் பெற்றோல் கப்பல் ஒன் றும் வந்து சேர்ந்துள்ளது. "இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தற்போது நாளொன்றுக்கு 30 முதல் 35 வரையான மில்லியன் ரூபாவை வருமானமாகப் பெறுகிறது. அதனை மத்திய வங்கிக்கு அனுப்பினால் அதற்கேற்ற தொகைக்கு அவர்கள் டொல ரைத் தருவார்கள். அதைக் கொண்டே எரிபொருள் கப் பல்களின் கொடுப்பனவுகள் செய்யப்படவேண்டியிருக்கிறது" என்று அமைச்சு அதிகாரி தெரிவித்தார்.

கொடுப்பனவுகள் தாமதமாவதால் தண்டப் பணம் அல்லது தாமதக் கட்டணம் பெரியளவில் செலுத்தவேண்டி வருமே என்று கேட்கப்பட்டதற்கு, இதுவரையில் அதுபோன்ற கோரிக்கைகள் வரவில்லை என்று அந்த அதிகாரி தெரி வித்தார்.

இலங்கையில் அந்நியச் செலாவணிக் கையிருப்பு நெருக்கடி காரணமாக ஏற்கனவே டீசல் பயன்பாடு நாளொன்றுக்கு 4 ஆயிரம் மெற்றிக் தொண் என்ற அளவிலும் பெற்றொல் பயன்பாடு நாளொன்றுக்கு 3 ஆயிரம் மெற்றிக் தொண் என்ற அளவிலும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

தற்போது இறக்கப்படத் தொடங்கியிருக்கும் எரிபொருட்கள் அடுத்து வரும் 10 முதல் 12 நாட்களுக்குப் போதுமானவை என்று எதிர்பார்க்கப் படுகின்றது. கொழும்புத் துறைமுகத்தில் தரித்துள்ள கப்பலில் உள்ள 40 ஆயிரம் மெற்றிக்தொண் எரிபொருள் பணம் செலுத்தப்பட்டதும் இறக்கப்படும் என்று எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தனது கீச்சக (ருவிற்றர்) பக்கத்தில் தெரிவித்திருக்கிறார்.

---

## வேலைக்காக...

படுத்தும் வகையில் இலங்கை அலுவலகத்திற்கான ஆட்களைத் தேர்வு செய்வதற்கான திறந்த நேர்முகத் தேவை கட்டார் ஏயார்வேஸ் அறிவித்திருந்தது. இது தொடர்பான அறிவிப்பு கடந்த வாரம் விடுக்கப்பட்டிருந்தது. பயணிகளின் அனுபவத்தை மேலும் மேம்படுத்தும் வகையிலும் பன்னாட்டுச் சேவையை விரிவாக்கும் வகையிலும் இலங்கையிலிருந்து பல பணிகளுக்கும் ஆட்சேர்ப்பு இடம்பெறஇருப்பதாக அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதைத் தொடர்ந்து நேர்முகத் தேர்வு நடைபெற்ற கொழும்பு தாஜ்சமுத்திரா சொகுசு வி-டுதியில் பெரும் எண்ணிக்கையில் வேலைதேடுவோர் குவிந்தனர். மிகப் பெரும் வரிசையாக அவர்கள் விடுதிக்கு வெளியே நின்று கொண்டிருந்தமை பார்ப்பவர்களின் கவனத்தை ஈர்த்ததுடன் பரபரப்பையும் ஏற்படுத்தியது.

வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் அமைச்சர் மனுச நாணயக்காரவும் நேர்முகத் தேர்வைப் பார்வையிடுவதற்காக அந்த இடத்திற்கு வந்து சென்றார்.

# உங்கள் செல்பேசி உளவு பார்க்கப்படுகிறதா?

ஹரி



காலை நம் கண் விழித்ததும் முதலில் தேடுவது நமது அலைபேசியைத்தான். இரவு நாம் உறங்கப்போகும் முன்னர் கடைசியாகப் பார்த்துக் கொண்டிருப்பதும் அதுவே. தொலைபேசியாக அறிமுகமாகி, அலைபேசியாக வடிவம் கொண்டு, பிறகு திறன்பேசியாக உருமாறி நிற்கிறது இத்தொழில்நுட்பம். இப்போது அழைப்புகளுக்காக மட்டும் அலைபேசி இல்லை, அனைத்துமே அலைபேசிதான்.

நமது தனிப்பட்ட தகவல்கள், புகைப் படங்கள், வங்கிக் கணக்கு விவரங்கள், லாக்கர் பின் எண், மருத்துவ விவரங்கள், ஏன் நமக்கு மட்டுமே தெரிந்த நமது அந்தரங்க இரகசியங்களைக்கூட தெரிந்து வைத்திருக்கும் நம் குட்டி நண்பன் நமது மொபைல். அரக்கனின் உயிர் ஏழு கடல், ஏழு மலை கடந்து கூண்டுக்குள் இருக்கும் கிளிக்குள் இருக்கிறது எனக் கதைகளில் படித்திருப்போம். நாம் அரக்கனா தெரியாது, ஆனால் ஒவ்வொருவர் உயிரையும் தனக்குள் ஒளித்து வைத்திருக்கும் கிளி, இன்று நிச்சயமாக நமது அலைபேசிதான்.

அப்படிப்பட்ட நமது அலைபேசியை யாரேனும் ஹேக் செய்துவிட்டார்களா! ஒட்டுக்கேட்டு வந்தியத் தேவனாக உளவு பார்க்கிறார்களா? இதை எப்படிக் கண்டுபிடிப்பது? இதிலிருந்து எப்படி விடுபடுவது? இதைத்தான் இந்த வாரம் பார்க்கப்போகிறோம்.

**உளவுச் செயலிகள்**

அலைபேசியில் உளவிற்கு மிக முக்கியமாக உதவுவது உளவுச் செயலிகள். ஸ்பை ஆப்ஸ் என அழைக்கப்படும் இவை இயங்கும் விதம், இதன் மறைந்து கொள்ளும் குணங்களை முந்தைய கட்டுரைகளில் விரிவாக எழுதியுள்ளோம். உளவுச் செயலிகளை மூன்று விதங்களாக வகைப்படுத்தலாம்.

அடிப்படைச் செயலிகள் (Basic)

மேம்படுத்தப்பட்ட செயலிகள் (Advanced)

அரசு வகை உயர்மட்ட வணிகச் செயலிகள் (Government Grade Commercial Spyware)

அடிப்படை மற்றும் மேம்படுத்தப்பட்ட உளவுச் செயலிகள் கூகுள் ப்ளே ஸ்டார், ஆப் ஸ்டோர் போன்ற செயலிச் சந்தைகளில் கிடைப்பவை. அரசு வகை உயர்மட்ட வணிகச் செயலிகள் என்பது, பெகசஸ், ஹெர்மிட் போன்று மக்களின் நடவடிக்கைகளை உளவு பார்க்க ஓர் அரசாலோ அல்லது அதற்கு இணையான அதிகாரம் கொண்ட அமைப்புகளாலோ பயன்படுத்தப் படுபவை. உலக அரசியலின் பில்லியன் டாலர் நவீன வியாபாரம் இது. இதை விடுத்து, ஒரு சாதாரண மனிதனை உளவு பார்க்க பயன்படுத்தப்படும் முதல் இரு வகைகளைப் பார்க்கலாம்.

'எம்எஸ்பி' (Mspy), 'உமோபிக்ஸ்' (Umobix), 'ஹோவ் வாட்ச்' (Hovewatch), 'ஸ்பைபப்புள்' (Spybubble) இப்படி நிறைய உளவுச் செயலிகள் சந்தைகளில் கிடைக்கின்றன. முதல் சில நாட்களுக்கு இலவசமாகச் செயல்படும்போது அடிப்படைத் தகவல்களையும் பணம் செலுத்தி பிரீமியம் சந்தாதாரரான பின் மேம்படுத்தப்பட்ட சேவைகளையும் வழங்கும். ஒரு அலைபேசியில் இது நிறுவப்பட்டதும் அதன் மைக்ரோபோன், ஸ்பீக்கர், தட்டச்சு (Key logging), காமிரா, ஸ்கிரீன் ரெக்கார்டர் போன்ற முக்கியமான அம்சங்களில் நுழைந்துகொள்ளும். இதன் மூலம் நமக்கு வரும் அழைப்புகள், நாம் மொபைலில் தட்டச்சு செய்யும் அனைத்து வார்த்தைகளும் அதன் வசம் சென்றுவிடும். நீங்கள் மொபைலில் என்ன தேடுகிறீர்கள், என்ன பார்க்கிறீர்கள், என்ன புகைப்படம் எடுக்கிறீர்கள் என அனைத்தையும் பதிவுசெய்து, தன்னை அனுப்பிய வந்தியத்தேவனின் மேகக் கணினிக்குத் தாரை வார்த்துவிடும். ஸ்கிரீன் ரெக்கார்டிங் அம்சமும் அதன் வசம் இருப்பதால், வீடியோ அழைப்புகள், வாட்ஸப் அழைப்புகள் எதுவும் உளவுச் செயலியிடம் இருந்து தப்பாது.

இந்த உளவுச் செயலிகள் எப்படி நமது மொபைலில் நுழைகின்றன?

இதை க்ளிக் செய்யுங்கள், அதைத் தரவிறக்குங்கள் எனக் குறுஞ்செய்தி, மின்னஞ்சல், சமூக வலைதள இன்பாக்ஸ் செய்தி மூலம் அனுப்பப்படும் 'ஃபிசிங்' (Phising) இணைப்புகள்.

பொது இடங்கள், ஹோட்டல்கள், ஷாப்பிங் மால் போன்றவற்றில் தரப்படும் இலவச, பாதுகாப்பற்ற

பொது வைபை (WIFI) பயன்பாடு... இவற்றின் மூலம் ஹேக்கர்கள் மிக எளிமையாக உங்கள் மொபைலில் நுழைந்துவிட முடியும்.

பேருந்து நிலையம், தொடருந்து நிலையம் போன்ற பொது இடங்களில் நிறுவப்படும் சார்ஜிங் நிலையங்களை உபயோகிப்பதன் மூலம், அதன் பின்னணியில் இதுபோன்ற செயலிகளை நிறுவக்கூடிய சிறிய சிப்பைப் பொருத்தி இருப்பார்கள். இவை வழியாகவும் உளவுச் செயலிகள் உள் நுழையும்.

**சரி விஷயத்துக்கு வருவோம்!**

நமது செல்பேசியில் இதுபோன்ற உளவுச் செயலிகள் நிறுவப்பட்டுள்ளனவா என்பதை எப்படிக் கண்டுபிடிப்பது?

பாப் அப்ஸ் (POP UPs) எனப்படும் தேவையில்லாத விளம்பரங்கள் உங்கள் மொபைல் திரையில் வந்துகொண்டே இருக்கிறதா, குறிப்பாக ஆபாச விளம்பரங்கள், பெண்களின் புகைப்படங்களுடன் வரும் சர்வேக்கள் என ஏதோவொரு செய்தி உங்கள் மொபைலில் வந்துகொண்டே இருந்தால் உளவுச் செயலிகள் இருப்பதற்கான வாய்ப்புகள் அதிகம். காரணம் உளவுச் செயலிகளுக்கான மறைமுக வருமானம் இதுபோன்ற விளம்பரச் செயலிகளிடம் (Adware) இருந்தும் கிடைக்கிறது.

உங்களது இணைய அளவு (மொபைல் டேட்டா) கட்டுக்கடங்காமல் உபயோகிப்படுகிறதா? எந்தச் செயலி இத்தனை டேட்டாவை உபயோகிக்கிறது எனத் தேடியும்



கிடைக்கவில்லை எனில் உளவுச் செயலிகள் இருப்பதற்கான வாய்ப்புகள் அதிகம். காரணம், உங்கள் தகவல்களைக் குறிப்பிட்ட நேர இடைவெளியில் உளவுச் செயலிகள் தங்களது மேகக் கணினிக்கு அனுப்பிக்கொண்டே இருக்கும். அதற்காக அது பயன்படுத்துவது உங்களது சொந்த இணைய அளவைத்தான். ஆகவே, அதன் மீதும் ஒரு கண் வைத்திருங்கள்.

அலைபேசி தொடர்ந்து சுணங்குகிறதா, எதைத் திறந்தாலும் தடுமாறி நேரம் பிடித்துத் திறக்கிறதா? தினசரி வரும் அப்டேட்களால் மூன்று வருடங்களுக்கு மேற்பட்ட மொபைலில் இது இயல்பாகவே நிகழ வாய்ப்புண்டு. ஆனால், உங்கள் மனதிற்குத் தெரியும். நேற்று வரை நன்றாக இயங்கிக்கொண்டிருந்த மொபைல் திடீரென்று சுணங்கி மக்கர் செய்தால் சுதாரித்துக்கொள்ளவேண்டும். காரணம், உளவுச் செயலிகள் தாங்கள் நன்றாகச் செயல்படுவதற்கு நமது மொபைலின் ரேம் வேகத்தைப் பயன்படுத்திக் கொள்வதால் இந்தச் சுணக்கம் நிகழும்.

எவ்வளவு முறை நீக்கினாலும் தேவையில்லாத செயலிகள் தொடர்ந்து மொபைலில் நிறுவப்படுகிறதா! உளவுச் செயலிகள் காரணமாக இருக்கலாம். இவை செயல்பட இன்னும் சில செயலிகளின் துணை தேவை. ஆகவேதான், அவற்றை நாம் நீக்கினாலும் இவை மீண்டும் நிறுவிவிடும்.

அலைபேசியின் பேட்டரி இருப்பு விரைவில் தீர்ந்துவிடுவதும் ஓர் அறிகுறி. உளவுச் செயலிகள் பின்னணியில்

**குறிப்பாக ஆபாச விளம்பரங்கள், பெண்களின் புகைப்படங்களுடன் வரும் சர்வேக்கள் என ஏதோவொரு செய்தி உங்கள் மொபைலில் வந்துகொண்டே இருந்தால் உளவுச் செயலிகள் இருப்பதற்கான வாய்ப்புகள் அதிகம்.**

தொடர்ந்து இயங்கிக்கொண்டிருப்பதே இதன் காரணம். பேட்டரியை மாற்றிப்பாருங்கள், அப்போதும் இது நிகழ்ந்தால் மொபைலை மாற்றுவது உசிதம்.

பேட்டரி நன்றாக இருப்பினும் மொபைல் அணைந்து மீண்டும் தானாக உயிர் பெறுவது, நாம் அழைக்காத எண்கள் அழைப்பு பகுதியில் இருப்பது, செயலிகள் தாமாக திறப்பது, அழைப்பு பேசும்போது பின்னணியில் ஏதோவொரு சத்தம் அல்லது எதிரொலி தொடர்ந்து கேட்பது, நெட்ஒர்க் முழுமையாக இருப்பினும் அழைப்பு செல்லாமல் திணறுவது, உங்களது தொடுதிரை சலனமற்றுப் போவது போன்றவையும் உளவுச் செயலிகள் மொபைலில் இருப்பதற்கான அறிகுறி. தொடர்ந்து பின்னணியில் இயங்கும் ஒரு செயலி மொபைலின் இயக்கத்தைக் கட்டுப்படுத்துவதால் ஏற்படுத்தும் விளைவுகளே இவை.

**கட்டுப்படுத்துவது எப்படி?**

சரி! மொபைலில் உளவுச் செயலி இருப்பதை உறுதிசெய்துகொண்டீர்கள். இப்போது அதை எப்படி நீக்கலாம்?

இது போன்ற செயலிகளை நீக்குவதற்கான வசதியை 'மால்வேர்பைட்ஸ்' (Malware bytes), 'அவஸ்ட்' (Avast), 'பிட்டிபெண்டர்' (Bitdefender) போன்ற வைரஸ் எதிர்ப்பு தயாரிப்புகள் வழங்கின்றன. மொபைலில் நிறுவி ஒரு ஸ்கேன் தட்டினால் நீக்கிவிடும். இதை நிறுவும்போது சரியான தயாரிப்பைத்தான் நிறுவுகிறோமா என இரு முறை உறுதிசெய்துகொள்ளுங்கள். காரணம், இதே பெயரில் போலிகள், உளவுச் செயலி இணைப்புகள் இருக்கும் வாய்ப்பு இருக்கிறது.

ஆண்ட்ராய்டு மொபைல்களுக்கு 'கூகுள் ப்ளேப்ரொடெக்ட்' (Google Play Protect) என்றொரு சேவை ப்ளேஸ்டோர் செட்டிங்ஸ் பகுதியில் இருக்கிறது. இதைப் பயன்படுத்துவதன் மூலன் மொபைலில் நிறுவப்படும் அனைத்துச் செயலிகளும் உடனடியாக ஸ்கேன் செய்து அதன் தரம் உறுதிசெய்யப்படும்.

உங்களது மொபைல் பிரவுசர் உலாவியில் பாதுகாப்பான தேடலை (Safe Browsing) நீங்கள் பயன்படுத்தலாம். தீங்குநிரல்கள் இருக்கும் இணைப்புகளைக் கிளிக் செய்தால் அது திறக்கும்போது இந்தத் தளம் ஆபத்தானது

# தலதாமாளிகைக் குண்டுவெடிப்பும் தர்மலிங்கமும்

**கமலநாதன்**

சேனக குமாரசிங்க என்பவர் காவல்துறைக் குற்றத் தடுப்பு விசாரணைப் பிரிவின் மூத்த புலனாய்வு அதிகாரியாவார். இரத்தின புரியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் இரத்மலானை பகுதியில் வசித்தார். கொழும்பு - இசுப்பத்தானை தெஸ்டன் கல்லூரியில் கல்வி கற்றுப் பின் காவல்துறையில் சேர்ந்தார். தலதாமாளிகை மீதான குண்டுவெடிப்புத் தொடர்பான விசாரணைப் பிரிவுக்குத் தலைமை தாங்கினார். தலதாமாளிகைக் குண்டுத் தாக்குதலுடன் தொடர்புடையவர் என்று விசாரணைகள் மூலம் அறிந்த தர்மலிங்கம் என்பவரை புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த மூதூர் - கட்டைபறிச்சான் பகுதிக்குள் சென்று கைது செய்து மேலதிக விசாரணைகளை நடத்தினார். வெனசயூரியூப் தளத்துக்கு அவர் வழங்கிய செவ்வியின் முதல் பாகம் கடந்த வாரம் வெளியாகியிருந்தது. அதன் இரண்டாவது பாகம் இது.

அதிகாலை 4 மணிக்குப் படகு ஒன்றில் மூதூர்ப் பாலத்தினூடாகச் சென்றோம். அங்கு ஒரு கரையில் இறங்கினோம். நாம் இறங்கிய இடத்திலிருந்த அவர்களின் வீடு ஒன்றை முற்றுகையிட்டோம். நாம் தேடி வந்தவர்கள் அந்த வீட்டிலிருந்து 4 கிலோ மீற்றர்களுக்கு அப்பால் இருக்கிறார்கள் என்று அந்த வீட்டுக்குள் இருந்தவர்களை விசாரித்தபோது அறிந்தோம். வீட்டுக்குள் இருப்பவர்கள் வெளியேறிவிடாமல் பார்த்துக் கொள்வதற்காக எமது அணியில் சிலரை அந்த வீட்டுக்குள் நிற்க வைத்துவிட்டு நிலாம், குழுவினருடன் மற்றைய வீட்டைத் தேடிச் சென்றோம். மற்றைய வீட்டை முற்றுகையிட்டபோது பெரிய கைவிரலுள்ள உயரமான அந்த நபர் படுக்கையிலிருந்து எழுந்து ஓட முயற்சித்தார். அவரை மடக்கிப் பிடித்தோம். வீட்டிலிருந்த ஏனையவர்களையும் கைது செய்துகொண்டு மிக வேகமாக 4 கிலோ மீற்றர் தூரத்தையும் கடந்து கட்டை பறிச்சான் படை முகாமுக்குக் காலை 6 மணிக்கு முன்னர் வந்து சேர்ந்தோம். ஆண்கள் இருவரையும் பெண்கள் இருவரையும் அழைத்து வந்தோம். அதில் உயர்ந்த தோற்றமும் பெரிய விரலுமுள்ள நபர்தான் தர்மலிங்கம் என்பவர்.

உடனேயே கொழும்புப் புலனாய்வுப் பணியகத்துக்கு அவர்களைக் கொண்டு வந்து விசாரித்தோம். எமது அணிதான் முதன் முதலாகப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் ஊடுருவிச் சென்று கைது நடவடிக்கை ஒன்றைத் துணிகரமாகச் செய்திருந்தது.

### கோரதீவு - கண்டி புகையிலை வியாபாரம்

குண்டு கொண்டுவரப்பட்ட வாகனத்தில் மட்டக்களப்பு - கோரதீவுப் பகுதியிலிருந்து கண்டிக்குப் புகையிலை ஏற்றி வியாபாரம் செய்தவர்தான் தர்மலிங்கம். இந்த வியாபாரத்தை ஒருவருட காலம் வரை அவர் செய்திருக்கிறார். இதன் போது தருணி போன்ற இளைஞர் யுவதிகளைக் கவரும் பத்திரிகைளையும், வேறு சில சிங்களப் பத்திரிகைகளை வாங்கித் தனது வாகனத்தில் போட்டு வைத்திருப்பார் தர்மலிங்கம்.

என எச்சரிக்கும்.

உங்களது மொபைலில் நிறுவப்பட்டிருக்கும் செயலிகளின் பட்டியலை அடிக்கொரு முறை சோதித்துக் கொள்ளுங்கள். தேவையற்ற செயலிகள் அல்லது மொபைலின் இயக்கத்திற்குத் தேவைப்படும் முக்கியமான செயலியின் பெயரில் இரு செயலிகள் இருந்தாலும் உஷார். உளவுச் செயலிகள் தங்களைத் தற்காத்துக் கொள்ள இதுபோன்ற மாறுவேட வேலைகள் செய்யும். அலைபேசியில் இயக்கத்திற்குத் தேவைப்படும் முக்கியமான செயலி என்றால் அதை நீக்குவதற்கான தேர்வே அதில் இருக்காது. அப்படி இருந்தால் அதுதான் மாறுவேட உளவுச் செயலி என பொருள்.

இது எல்லாம் செய்தாயிற்று, ஒன்றும் கைகூடவில்லை என்றால் மொபைல் தரவுகளை முழுவதுமாக அழித்து (Factory Reset) புதுப்பித்துக்கொள்ளுங்கள். அதன் பிறகு வழக்கமாகச் சொல்வதுதான், மூன்றாம் தரப்புச் செயலிகள் (Third party apps ) பாதுகாப்பற்றவை, ஆபத்து நிறைந்தவை. எவருக்கும் கட்டுப்படாதவை. ஆகவே, மொபைலில் இருக்கும் செயலி சந்தையைத் தவிர வேறு எங்கிருந்தும் செயலிகளைத் தரவிறக்காதீர்கள். தேவையில்லாத இணைப்புகளைக் க்ளிக் செய்யாதீர்கள். அவற்றின் மூலமும் இதுபோன்ற செயலிகள் தாமாகவே தரவிறங்கும்.

அலைபேசியைச் செயலிகளால் நிறைக்காமல் எளிமையாக சில செயலிகளை மட்டும் வைத்துக்கொள்ளுங்கள். மொபைலுடன் செலவிடும் நேரத்தை முடிந்தவரை குறைக்க முற்படுங்கள். எவ்வளவு அதிகம் நாம் செயலிகளை சார்ந்து இருக்கிறோமோ, அவ்வளவு அதிகம் நாம் செயல்படாமல் நேரத்தைச் செலவழிக்கிறோம் என்பதே உண்மை நண்பர்களே!

வாகனத்தைச் சோதனையிடும் காவல் துறை, படையினரின் பார்வையில் அந்தப் பத்திரிகைகள் தென்படுவதால் அவர்கள் தர்மலிங்கத்திடம் தமக்கு விருப்பமான பத்திரிகை ஒன்றைக் கேட்டு எடுப்பார்கள். இவ்வாறாகச் சோதனைச் சாவடிகளில் காவல்துறை, படையினருக்கு விசுவாசமானவராகத் தர்மலிங்கம் ஆகியிருந்தார்.

இறுதியாகக் குண்டுபொருத்தப்பட்ட வாகனம் கண்டி இந்து கலாசார மண்டபத்தில் நிறுத்தி வைக்கப்பட்டு அதிகாலையில் தர்மலிங்கம் கண்டி நகரில் வைத்துத் தாக்குதலுக்குத் தயாராக விருந்த 4 புலிகளிடம் அதை ஒப்படைத்தார். ஒருவர் வாகனத்தைத் தலதா மாளிகையை நோக்கிச் செலுத்தியபோது ஏனைய மூவரும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள் என்று அந்தச் சம்பவத்தை நேரில் கண்டவர்களிடம் பெறப்பட்ட வாக்குமூலத்திலிருந்து அறியமுடிந்தது. அந்த நால்வருமே தலதா மாளிகைத் தாக்குதலின்போது இறந்தார்கள்.

இந்த வாகனத்தில் பொருத்தப்பட்ட குண்டு வெடிமருந்து 200 கிலோவுக்கு அதிகமாக இருக்கக்கூடும் என்று பகுப்பாய்வு மூலம் அறிய முடிந்தது. தர்மலிங்கம், ரவிச்சந்திரன் ஆகிய இருவருக்கும் தலதா மாளிகைக் குண்டுவெடிப்புத் தொடர்பில் குற்றம் நிருபிக்கப்பட்டு 680 வருடங்கள் தண்டனை வழங்கப்பப்பட்டது.

தலதா மாளிகைத் தாக்குதல் விடயமாக இதுவரை எந்த ஊடகங்களிலும் கருத்து வெளியிடவில்லை. முதல் தடவையாக வென யூரியூப்புக்கு இந்தத் தகவலை வெளியிடுவதில் மகிழ்ச்சி. புலிகளின் பகுதிக்குள் நாம் இரகசியமாக ஊடுருவி வெளியேறிய பின்னர் தர்மலிங்கத்தை கட்டை பறிச்சானில் வைத்துக் கைது செய்ய உதவிய அசார் என்பவரைக் குஞ்சன் வீட்டுக்கு அருகில் வைத்துப் புலிகள் சுட்டுக் கொன்றனர். அத்தோடு மூதூர்ப் பகுதியிலிருந்த முன்னனிக் காவலரணைப் புலிகள் தாக்கினர் என்றும் பின்னர் அறிந்தேன். எரிந்த குறையில் சிக்கிய ரயர் ஒன்றை வைத்துத் தலதாமாளிகைக் குண்டுவெடிப்புப் பற்றிய முழு விவரங்களையும் புலனாய்வு செய்து கண்டறிந்ததில் எனக்குப் முழு திருப்தி.

---

**பொன்னி**

# சாதி கடந்த "களவு"

முன்பெல்லாம் தமிழ்ச் சமூகத்தில் ஒருவன் பிறந்த சாதிதான் அவனது தொழிலைத் தீர்மானித்தது. ஒருவன் என்ன தொழில் செய்கிறான் என்பதைக் கேட்டறிந்து அவனது சாதியைத் தெரிந்துகொண்டார்கள். தொடக்கத்தில் ஐரோப்பாவில் அடிமை முறை இருந்தது. நிலப்பிரபுவுக்கு அடிமையாக இருப்பவர் தோட்ட வேலை, மிருக வளர்ப்பு, ஆடை தோய்ப்பது என எல்லா வகையான வேலைகளையும் செய்தார். அங்கு தொழிலுக்குச் சாதி இருக்கவில்லை. ஆண்டான் - அடிமை என்ற பிரிவு இருந்தது. இந்தியாவில் குடிமை முறை இருந்தது. சமூக வாழ்க்கையில் இணைக்கப்பட்ட தொழில் செய்வதாகக் குடிமை முறை இருந்தது. வண்ணார், பறையர், நாவிதர் அல்லது அம்பட்டர் என்றெல்லாம் சாதிகள் இருந்தன. இன்றைய சூழலில் பல புதிய தொழில்கள் உருவாகியுள்ளன. அவற்றை இந்தச் சாதிக்காரர்தான் செய்கிறார்கள் என்பதற்கு எவ்வித பிரிவும் இல்லை. சாதிகள் இல்லையடி பாப்பா என்று பாரதி பாடியதுதான் உண்மையாக இருந்தாலும் சாதியை இங்கிருந்து அடியோடு அகற்ற முடியவில்லை. நிலமை இவ்வாறிருக்க அனைத்துச் சாதியினரும் செய்யும் பொதுத் தொழிலாகக் களவு அமைந்துவிட்டது என்பது தான் இப்போது 'ட்ரென்ட்'.



**சாதியில்லாத தொழில்கள்**

கைபேசிக் கடைக்காரர், அவற்றைத் திருத்தும் தொழில், பதிப்புத் துறை மற்றும் கணினி சார் தொழில்கள், இலத்திரனியல், மின்பொருள்கள் சார் தொழில்கள், வாகனம் மற்றும் இயந்திரங்களைப் பழுதுபார்த்தல், சாரதிப் பயிற்சியளித்தல், கற்பித்தல், கோழிப் பண்ணை, திருமண மண்டபம், மருந்தகம், மருத்துவர்கள், ஆய்வாளர்கள், இறக்குமதியாளர்கள், பொதிகள் சேவை, கேற்றறிங் என்கிற வீடுகளுக்குச் சென்று உணவு வழங்குவோர், தொலைத் தொடர்புத் துறை, விடுதிகள் - தங்குமிடங்கள் சேவை, எரிபொருள் நிலையம், அரைக்கும் ஆலை, மருந்தகம், வெதுப்பகம், புத்தகக்கடை, மரக்கறி வியாபாரம், சட்டத்தரணிகள், சிசிரிவி கமாரா பொருத்துவோர்.

பால் உற்பத்தி, முப்படைகளில் பணி, விமானி, பல்வேறுபட்ட பொருள்களை உற்பத்தி செய்வோர், தாதியர்கள், அரச பணியாளர்கள், கிராம அலுவலர்கள், அழகு நிலையங்கள், ரயில் திணைக்கள ஊழியர்கள் என இன்ன சாதியினர் தான் இதில் ஈடுபடுகிறார்கள் என்று வரையறுக்க முடியாத - சாதி கலக்காத பல்வேறு புதிய தொழில்கள் இப்போது நடைமுறையிலுள்ளன. இத்தகு தொழில்களில் ஈடுபடுகின்ற புதிய தலைமுறையினரை வைத்து இவர் இன்ன சாதி என்று கண்டறிய முடியாத நிலையிருப்பதால் "உங்கட அப்பா என்ன செய்யிறார்...? உங்கட இடம் எது?" என்று கேள்வி தொடுத்துக் குடைந்தெடுக்கும் பழசுகளிடம் இவர்களால் பிடி கொடுக்காமல் இருக்க முடிவதில்லை...!



**போராட்ட காலத்தில் சாதி**

தமிழீழப் போராட்ட இயக்கங்கள் பல தொடங்கப்பட்ட போதிலும் அவை சமூக விடுதலையை மையமாகக் கொண்டு செயற்பாட்ட போதிலும் தமிழர் மத்தியிலுள்ள சாதிய அடக்கு முறையிலிருந்து விடுபட வேண்டும் அவற்றுக்கு எதிராகப் போராட வேண்டும் என்ற உளவியலே பெரும்பாலான போராளிகளிடம் இருந்தது. அதனாலேயே போராட்ட இயக்கங்கள் பலவும் (புளெட் தவிர) சாதிய ஒடுக்குமுறையால் பாதிக்கப்பட்ட மக்களால் நிரப்பப்பட்டன. பிரபாகரன் தலைமையில் எழுச்சி கண்ட விடுதலைப் புலிகள் இயக்க காலத்தில் சாதிய ஒடுக்குமுறை மட்டுமன்றி சாதியம் குறித்த பேச்சாடல் கூடப் பொதுவெளிக்கு வராமல் குசு குசுத்துக் கிடந்தது.

**புலிகள் இல்லாது போனதும் எழுந்த புழுகம்**

போர் முடிவுக்கு வந்தபின் ஏற்பட்ட சமூக மாற்றம் என்பது சாதியத்துக்குப் புத்துயிரளித்தது. புலிகள் இல்லாமல் போனது வாய்ப்பாக அமைந்தது. எது எப்படிப் போனாலும்கூட எல்லாச் சாதியினரும் பிறப்பில் தமது குலத் தொழிலாக இருந்த தொழிலைக் கைவிட்டு இப்போதெல்லாம் வேறு தொழில் முறைகளுக்கு பழக்கப்பட்டிருக்கிறார்கள். மண்வெட்டியோ கலப்பையோ பிடிக்காது, விவசாயமே செய்யாது இன்றும் விவசாயி என்று கூறிக் கொண்டிருப்பதுபோல ஏனையவர்களும் தமது பாரம்பரியத் தொழிலைக் கைவிட்டு அரச உத்தியோகம், முதலீடுகள், தொழில்நுட்பம் சார்ந்த வேலைகள் எனப் புதிய தொழில்களில் இறங்கியுள்ளனர்.

**பொதுத் தொழில் களவு**

பாரம்பரியமாகச் சாதி சார்ந்து செய்துவந்த தொழிலைக் கைவிட்ட தமிழர்கள் எந்தத் தொழிலில் ஈடுபட்டாலும் அங்கு எவ்வாறு களவெடுக்க முடியும் என்கிற மனநிலைக்குப் பழக்கப்பட்டிருக்கிறார்கள். களவு என்கிற பொதுத் தொழிலைக் கற்றிருக்கிறார்கள். தொழில் தர்மம், அறம், சமூக நீதி, தொழில் புரியும் இடத்துக்கு விசுவாசமாக இருப்பது போன்ற விடயங்களை மறந்து மத குருக்கள் தொடங்கிக் கழிவகற்றும் தொழில் செய்வோர் வரை களவு என்ற தொழில் முறையில் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள்.

பல அரச ஊழியர்கள், அதிகாரிகள் அரச சொத்துக்

**பாரம்பரியமாகச் சாதி சார்ந்து செய்துவந்த தொழிலைக் கைவிட்ட தமிழர்கள் எந்தத் தொழிலில் ஈடுபட்டாலும் அங்கு எவ்வாறு களவெடுக்க முடியும் என்கிற மனநிலைக்குப் பழக்கப்பட்டிருக்கிறார்கள்**

களை அபகரிக்கின்ற களவைச் செய்கிறார்கள், அலுவலகத்திலுள்ள காகிதங்கள், பிரதி எடுத்தல், வாகன - எரிபொருள் ஒதுக்கீடு இவற்றைவிட குத்தகைகளிலிருந்தும், தமக்குப் பிரியப்பட்ட குத்தகை தாரர்களிடமிருந்தும் பணம் சம்பாதிப்பது, பொருள் கொள்வனவில் சுத்துமாத்துச் செய்து பணம் தேடுவது, கடமை நேரத்தில் வெளியே வேறு வேலைகளில் ஈடுபடுவது, பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட பொருள்களைத் தமது சொந்தத் தேவைகளுக்குப் பயன்படுத்துவது என அரச அதிகாரிகள், அலுவலர்களின் களவுத் தொழில்கள் அமைவதைப்போலவே பல மனிதர்களும் தமது தொழில் முறைகளில் களவை எவ்வாறு செய்வது என்று அறிந்திருக்கிறார்கள்.

அண்மையில் ஏற்பட்ட எரிபொருள் தட்டுப்பாட்டின் போது அடாவடிக் கும்பல்கள் களத்தில் இறங்கி அட்டகாசம் செய்தபோது பிரதேச செயலக ஊழியர்களும் வேறு பல அரச அலுவலர்களும் அவற்றின் பின்னணியிலிருந்து பல லட்ச ரூபாக்களை உழைத்தார்கள் என்கிற செய்திகள் இப்போது புகையத் தொடங்கியிருக்கின்றன. நெருப்பில்லாமல் புகை வராதுதானே...?

எது எப்படியிருப்பினும் சாதிதான் தொழிலைத் தீர்மானிக்கிறது என்ற நிலை இப்போது மாறித் தமிழ்த் சமூகத்தில் எல்லோரும் தமது பொதுத் தொழிலாகக் களவைப் பற்றிப் பிடித்திருப்பதைக் காணமுடிகிறது. இந்தத் தொழிலில் ஈடுபடுபவர்கள் பொதுவெளியிலும், சட்டத்தின் பிடியிலுமிருந்து ஒருவரை ஒருவர் காப்பாற்றுவது என்பது இதை மேலும் வளர்த்தெடுக்கின்ற பணியாக இருந்து வருகிறது.

74



தர்மராசா

# சிறைச்சாலைக்கு வந்த பிரமுகர்கள்

**14.02.2002** அன்று கொழும்பிலிருந்து சட்டத்தரணி இரத்தினவேல் தலைமையில் ஒரு குழுவினர் வந்து எம்மைச் சந்தித்தனர். அவர்கள் கொண்டு வந்த படிவம் ஒன்றில் எமது விவரங்களை எழுதிக்கொடுத்தோம். பின்னர் எதுவும் நடக்கவில்லை.

**16.02.2002** அன்று சட்டத்தரணி விநாயகமூர்த்தி வந்து எம்மைச் சந்தித்தார். சமாதான நடவடிக்கையுடன் இணைந்ததாக உங்கள் விடுதலையும் அமையும் - என்றார். நான் நாடாளுமன்றத்திலும் வேறு மட்டங்களிலும் இதுபற்றிப் பேசி வருகிறேன். நெருக்கடிகளையும் கொடுத்து வருகிறேன் - என்றும் கூறினார். எமது விவரங்களை எழுதித் தருமாறு கேட்டதற்கிணங்க முழுமையாக எழுதி **18.02.2002** அன்று மட்டக்களப்புச் சிறைச்சாலையின் ஜெயிலர் பிரபாகரனூடாக விநாயகமூர்த்தியிடம் கையளித்தோம். பின்னர் எதுவும் நடக்கவில்லை.

நாம் சிறைக்குள் அடைக்கப்பட்ட நிலையில் ஆழமான கிணறு ஒன்றுக்குள் வீழ்த்தப்பட்டவர்கள்போல வெளியேற முடியாமல் தவித்தோம். இந்த நிலையில் எமக்குக் கிடைக்கின்ற எல்லாச் சிறிய துரும்புகளையும் நாம் வெளியேறக்கூடிய பலம் வாய்ந்த கயிறாக்குவதற்கு நினைத்தோம். யார் வந்து எத்தனை தடவைகள் விவரம் கேட்டாலும் சளைக்காமல் எழுதிக் கொடுத்தோம். ஆனால் அவற்றைப் பெற்றவர்களின் நடவடிக்கையோ எம்மை ஒருபேசு பொருளாகவோ, தம்மை உயர்வாகக் காட்டிக்கொள்வதற்காகவோ மட்டும் பயன்படுத்துவதாகவே இருந்தது. இதை நாம் புரிந்திருந்தபோதிலும் எமது நோக்கம் விடுதலை பெறுவது மட்டுமே.

**18.02.2002** அன்று நாடாளுமன்ற உறுப்பினர் வெள்ளிமலை திடீர் வருகையாக வந்து **600** பேரை விடுதலை செய்யவுள்ளார்கள் - என்றொரு செய்தியைச் சொல்லிச் சென்றார். இந்தச் செய்திக்கு என்ன அடிப்படை இருந்தது என்பதை இன்றுவரை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. கைதிகள் உள்ளே இருப்பவர்கள்தானே அவர்கள் சந்தோசப்படும்படியாக எதையும் சொல்லலாம் என்ற துணிவையும் வரத்தையும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி அவருக்கு வழங்கியிருக்கிறது.


**10.03.2002** அன்று இந்து கலாசார மற்றும் தமிழ் விவகார அமைச்சர் மகேஸ்வரன் மட்டக்களப்புச் சிறைக்கு வந்தார். விடுதலை படிப்படியாகத்தான் சாத்தியமாகும். முதலில் பிணையில் செல்வதற்கான ஒழுங்குககளைச் செய்யவுள்ளேன். உங்களது விடுதலை தொடர்பாகத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுடன் நேரடியாகக் கதைத்து அதற்கான உடனடி நடவடிக்கைகளை எடுப்பேன் - என்று உறுதியளித்துச் சென்றார். தமிழ் அரசியல் கைதிகளை

விடுவிக்க வெகுஜனப் போராட்டம் நடத்தவிருக்கிறார் என்று அன்றைய தினமே ரெலோ அமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் சொல்கிறார் என்று பத்திரிகைகளில் செய்தி வெளியாகியிருந்தது.

18.03.2002 அன்று தினகரன் பத்திரிகையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளை 3 மாதங்களுக்குள் விடுதலை செய்வதாகவும் விரைவில் 200 பேரை விடுதலை செய்வதாகவும் செய்தி வந்திருந்தது. அது வெறும் செய்தி மட்டுமே. அவ்வாறு எவையும் நடக்கவில்லை.

(தொடரும்)

# இரைப்பைப் புற்று கவனம்!



கு.கணேசன்

வாசகர் ஒருவர் ஒரு கேள்வியை எழுப்பியிருந்தார். குடல் புற்றுநோயும் வயிற்றுப் புற்றுநோயும் ஒன்றா என்பதே அவர் கேட்ட கேள்வி. அவரது தாயாருக்கு குடல் புற்றுநோய் ஏற்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டபோதும் அவர் இறந்துவிட்டார் என்று தெரிவித்திருந்தார். கடந்த வாரம் எழுதப்பட்ட குடல் புற்றுநோய் பற்றிய கட்டுரையைப் படித்துவிட்டு அவர் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறார்.

அவரைப் போலவே இரைப்பைப் புற்றுநோயும் குடல் புற்றுநோயும் ஒன்றா, வெவ்வேறா எனும் குழப்பத்தில் அநேக வாசகர்கள் இருக்கலாம். அவர்களுக்காக இந்த வாரக் கட்டுரை.

முதலிலேயே சொல்லிவிடுகிறேன். குடல் புற்றுநோய் வேறு. இரைப்பைப் புற்றுநோய் வேறு. இரண்டும் தனித்தனி இனம். உலக அளவில் நுரையீரல் புற்றுநோய்க்கு அடுத்தபடியாக மக்களைப் பெரிதும் பாதிப்பது இரைப்பைப் புற்றுநோய்தான். போனதலைமுறை வரை வயதானவர்களுக்கே இரைப்பைப் புற்றுநோய் வந்தது. இப்போது 30 வயதிலும் இது வருகிறது. பெண்களைவிட ஆண்களுக்கு இரைப்பைப் புற்றுநோய் வருவதுதான் அதிகம்.

**காரணங்கள் எவை?**

இரைப்பைப் புற்றுநோய்க்கு (Gastric cancer) முக்கியக் காரணம் துரித உணவுகள்தான். தவிர, மாசடைந்த சுற்றுச்சூழல் இந்த நோய் உருவாவதைத் தூண்டுகிறது. அதனால்தான் ஆஸ்பெஸ்டாஸ் தொழில் புரிபவர்கள், உலோகத் தொழில் புரிபவர்கள், சுரங்க வேலை செய்பவர்கள், ரப்பர் தோட்டத் தொழிலாளர்கள் ஆகியோருக்கு இந்த நோய் அதிக அளவில் வருகிறது.

அடுத்து, நீண்ட நாள்களுக்கு இரைப்பையில் புண் உள்ளவர்களுக்கு (Atrophic gastritis), கடுமையாக குருதிச் சோகை (Pernicious anemia) உள்ளவர்களுக்கு, வைட்டமின் பி--12 சத்துக்குறைவு உள்ளவர்களுக்கு இந்த நோய் வர வாய்ப்புகள் அதிகம். இந்தப் புற்றுநோய் வந்த குடும்பத்தில் பிறந்தவர்களுக்கு பரம்பரைத் தன்மை காரணமாக இது இளைய வயதிலேயே வர வாய்ப்பிருக்கிறது.

இரைப்பைப் புற்றுநோய்க்கு தவறான உணவுப் பழக்கமும் ஒரு முக்கியக் காரணம்தான். ஜப்பான் நாட்டில் கருகிய உணவை (Smoked food) அதிகமாக விரும்பிச் சாப்பிடும் பழக்கம் உள்ளது. நிறைய மது அருந்துவது, சோயா சாஸ் மற்றும் ஊறுகாய் வகைகளை உண்ணும் பழக்கம் அங்கு அதிகம். இதனால் ஜப்பானில் இரைப்பைப் புற்றுநோய் பெருமளவில் வருகிறது. அயர்லாந்தில் சுட்டமீன், கோர்ட்ரியாவில் வாட்டிய ஆமை, வட சீனாவில் 'கோலினாத்' என்னும் தானியம் போன்றவற்றை அதிக அளவில் உண்பதால் இந்த நோய் அந்த நாடுகளில் அதிகமாக வருகிறது.

தெற்காசிய நாடுகளில் புகைபிடித்தல், வெற்றிலை பாக்கு, புகையிலை, பான்மசாலா, நிறைய மது அருந்துதல் போன்ற பழக்க வழக்கங்களாலும் வயலில் தெளிக்கப்படும் பூச்சிக்கொல்லி மருந்துகளாலும் இந்த நோய் வருவதாகத் தெரிகிறது.

அதிக சூடான, காரமான, மசாலா மிகுந்த அல்லது அதிகக் குளிர்ச்சியான உணவுகளையோ, குளிர்பானங்களையோ அடிக்கடி உண்ணும்போது இந்த நோய் வெகு விரைவாக வந்துவிடுகிறது. எச்.பைலோரி (H.Pylori) கிருமி இரைப்பையில் நீண்ட காலத்துக்கு தொல்லை தருமானால் இந்த நோய் உண்டாகிற வாய்ப்பு அதிகரிக்கும்.

உணவில் உப்பை அதிகமாகச் சேர்த்துக்கொள்பவர்களுக்கும் செவ்விறைச்சிகளை (Red meat) அதிகமாக உண்ணும் பழக்கம் உள்ளவர்களுக்கும் இந்த நோய் வருகிறது. நார்ச்சத்து நிறைந்த காய்கறிகள், பழங்களைக் குறைவாகவும், கொழுப்பு மிகுந்த பீட்ஸா, பர்கர், சாண்ட்விச் போன்ற துரித உணவுகளை

அதிகமாகவும் உண்ணும்போது இந்த நோய் வரும் வாய்ப்பு அதிகரிக்கிறது. இரைப்பையில் 'பாலிப்' (Polyp) கட்டிகள் இருப்பவர்களுக்கு அவை புற்றுக்கட்டிகளாக மாறுவதற்கு வாய்ப்புண்டு.

**புகைப்பதையும் புகையிலை கலந்த பொருள்களைப் பயன்படுத்துவதையும் தவிர்க்கவேண்டும். மது அருந்தக்கூடாது. அதிக காரமான, சூடான, உப்பு அதிகமுள்ள உணவுகளைக் குறைத்துக் கொள்ள வேண்டும்.**


**அறிகுறிகள் என்னென்ன?**

பெரும்பாலோருக்கு இந்த நோய் தோன்றும்போது எந்தவித அறிகுறிகளும் வெளியில் தெரிவதில்லை. அப்படியே தெரிந்தாலும் இரைப்பைப் புண்ணுக்குரிய அறிகுறிகள்தான் முதலில் தெரியும். பசி குறைவது, ஏப்பம் வருவது, உணவில் விருப்பம் குறைவது, லேசான வயிற்றுவலி, வயிற்றுப் பொருமல், உணவை விழுங்குவதில் சிரமம் போன்ற அறிகுறிகள் வெளிப்படும். இவையெல்லாமே சாதாரண அறிகுறிகள் என்பதால், பலரும் 'அல்சர்' மருந்துகளைச் சாப்பிட்டுக் கொண்டு உண்மையான நோயைக் கவனிக்காமல் இருந்துவிடுவார்கள். அதற்குள் இரைப்பைப் புற்றுநோய் வளர்ந்து பரவிவிடும்.

பிறகுதான் இரைப்பைப் புற்றுக்கே உரிய அறிகுறிகள் தெளிவாகத் தோன்றும். அதாவது, இவர்கள் கொஞ்சமாகச் சாப்பிட்டாலும் வயிறு நிரம்பியதுபோல் இருக்கும். வயிற்றுவலி அடிக்கடி வரும். உணவு சாப்பிட்டதும் வயிற்றுவலி அதிகமாகும். குமட்டல், வாந்தி வரும். அது மோசமான வாடை எடுக்கும். வாந்தி வந்த பிறகு வலி குறையும். சமயங்களில் இரைப்பையில் பந்து உருளுவது போன்று இருக்கும். குருதி வாந்தி வரும். மலத்துடன் குருதி போகலாம். கருமலம் வெளியேறலாம். உணவு உண்பது குறையும். உடல் எடை குறையும். உடலில் குதுதி அளவு குறையும். வயிறு வீங்கி நீர்கோர்த்த மாதிரி தெரியும்.

**என்ன பரிசோதனைகள் உள்ளன?**

பயனாளிக்கு 'பேரியம்' மாவு சாப்பிடக் கொடுத்து, அவருக்குச் செரிமான மண்டலத்தை எக்ஸ்-ரே படம்



எடுத்துப் பார்த்தால் இந்த நோயைத் தெரிந்துகொள்ளலாம். இது பழைய முறை. இப்போது எண்டோஸ்கோப்பி மூலம் இரைப்பையைப் பரிசோதித்து, புற்றுநோயைத் தொடக்கத்திலேயே அறிகிறார்கள். தற்போது என்பிஐ எண்டோஸ்கோப்பி (NBI microscopy), குரோமோ எண்டோஸ்கோப்பி (Chromo microscopy) மற்றும் எண்டோ மைக்ராஸ்கோப்பி (Endo microscopy) மூலம் இரைப்பையில் புற்றுநோய் உள்ளதா, அது என்ன வகையைச் சேர்ந்தது, எவ்வளவு பரவியுள்ளது, அடைப்பு உள்ளதா எனப் பல விவரங்களை நேரடியாகப் பார்த்துத் துல்லியமாகத் தெரிந்துகொள்ளலாம். மேலும், புற்றுநோய் திசுவில் சிறு பகுதியை அகற்றி, திசுப் பரிசோதனைக்கு அனுப்பி, நோயை உறுதி செய்யலாம். திரவத் திசுப் பரிசோதனை (Liquid biopsy) மூலம் இந்த நோயை முன்னரே அறிவதும் உண்டு.

நோயாளியின் வயிற்றை 'அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன்', சி.டி.ஸ்கேன், எம்.ஆர்.ஐ. ஸ்கேன் போன்ற பரிசோதனைகளைச் செய்து பார்த்தால் இரைப்பைக்கு வெளியில் உள்ள உறுப்புகளான கல்லீரல், கணையம், கருப்பை, சிறுநீர்ப்பை, சிறுகுடல், பெருங்குடல், மலக்குடல், எலும்புகள், தண்டுவடம், மூளை போன்றவற்றுக்குப் புற்றுநோய் பரவியிருந்தால் தெரிந்துவிடும். இவற்றோடு மார்பு எக்ஸ்-ரே எடுப்பதும் குருதி மற்றும் மலப் பரிசோதனைகளும் தேவைப்படும்.

இப்போது 'பெட்-சிடி' ஸ்கேன் வந்துள்ளது. இது புற்றுநோய் பரவலை மட்டுமல்லாமல், புற்றுநோய் மிக மிக தொடக்கநிலையில் இருந்தாலும் இனிமேல் புற்றுநோய் வரக்கூடிய நிலையில் இருந்தாலும் துல்லியமாகத் தெரிவித்துவிடும். அதேநேரத்தில் எல்லோருக்கும் எல்லா ஸ்கேன் பரிசோதனைகளும் தேவையில்லை. நோயாளியைப் பொறுத்து இவற்றின் தேவை அமையும்.

**சிகிச்சைகள் என்னென்ன?**

இரைப்பைப் புற்றுக்கு அது உள்ள நிலைக்கு ஏற்ப அறுவைச் சிகிச்சை, கதிர்வீச்சு சிகிச்சை, மருந்து சிகிச்சை ஆகியவை பயன்படுகின்றன. இரைப்பையில் புற்றுக்கட்டி அகற்ற முடியாத நிலைமையில் இருக்குமானால், புற்று எதிர் மருந்துகளையும் கதிர்வீச்சு சிகிச்சையையும் முதலில் பயன்படுத்துவார்கள். இதன் பயனால் புற்றுக் கட்டி சுருங்கிவிடும். அதன் பிறகு அதை அகற்றுவது எளிதாகிவிடும். நோயின் நிலையைப் பொறுத்து மறுபடியும் மருந்து சிகிச்சையும் கதிர்வீச்சு சிகிச்சையும் தேவைப்படலாம்.

இப்போது இலக்கு சார்ந்த மருந்து சிகிச்சை (Targeted therapy) தரப்படுவது வழக்கமாகி வருகிறது. இவை குருதியின் வழியே புற்றுநோய் உள்ள இடத்தைத் துல்லியமாக அடைந்து புற்று மேன்மேலும் வளராமல் தடுக்க உதவுகின்றன. இந்த மருந்துகள் புற்றுநோய் இல்லாத மற்ற செல்களைத் தாக்குவதில்லை என்பது இந்தச் சிகிச்சையில் கிடைக்கும் பெரிய பயன். 'இமுனோதெரபி' என்னும் புதுவித சிகிச்சையும் இப்போது புகுந்துள்ளது. இவை எல்லாமே புற்றுநோயைப் முழுமையாகக் குணப்படுத்துகின்றன.

# கண்டறியாத கதைகள்



08

யசோமாமி

வணக்கம் மருமக்களே!

எல்லோரும் எப்படி இருக்கிறீர்கள்? நல்ல பிள்ளைகளாக பாடசாலையிலும் வீட்டிலும் நல்ல பெயர் வாங்கும் பிள்ளைகளாக இருக்கிறீர்களா? நல்லது. மிகவும் மகிழ்ச்சி.

இன்றைக்கு நான் உங்களுக்கு அவுஸ்திரேலியப் பழங்குடி மக்களின் ஒரு பிரிவினரான கட்டும்பா (Katoomba) இனக்குழுவினரின் வாழ்க்கையில் பரம்பரை பரம்பரையாக சொல்லப்பட்டு வரும் அழகான மலை ஒன்று பற்றிய தவிப்பான ஒரு கதையை உங்களுக்குச் சொல்லப்போகிறேன்.

நீலமலை (blue Mountain) என்றழைக்கப்படும் இம்மலை சிட்னியின் மேற்குப்பகுதியில் கட்டூம்பா (Katoomba) என்ற இடத்தில் அமைந்திருக்கிறது. சுற்றுலாப் பயணிகளின் விருப்பத்துக்குரிய இடமாகவும் நீல நிறமாகவும் இருக்கும் இந்த இடத்தை கட்டூம்பா என்ற பழங்குடி இன மக்கள் கொலோமட்டா (Colomatta) என்று அழைத்தார்கள். கட்டூம்பா என்ற இம் மக்கள்தான்



இந் நிலத்திற்குச் சொந்தக்காரர்கள்.

அவர்களிடமிருந்து நிலத்தினை அபகரித்துக்கொண்ட ஆங்கிலேயர்கள் இந்த இடத்தைப் பார்த்ததும் அது நீலநிறமாக இருந்ததனால் நீலமலை என்று பொருள்பட blue Mountain என்று அதற்குப் பெயர் சூட்டிவிட்டார்கள்.

இயற்கையோடு இணைந்து இயற்கையைப் போற்றி வாழ்ந்து வந்த இந்த நிலத்தின் சொந்தக்காரர்களான அபிரோஜினல் பழங்குடியினரான இம் மக்கள் சித்திரங்கள், ஓவியங்கள் வழியாகவும் வாய்மொழிக் கதைகள் வழியாகவும் தங்களுடைய பண்பாடுகளையும், நம்பிக்கைகளையும், பழக்க வழக்கங்களையும்,

அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற மேல்நாடுகளில் இரைப்பைப் புற்றுநோய் மோசமாக இருந்தால் அந்த இரைப்பையை முழுவதுமாக அகற்றிவிட்டு 'செயற்கை இரைப்பை'யைப் (Artificial stomach) பொருத்திவிடுகின்றனர். இங்கு இதற்கு வழியில்லை; பதிலாகப் 'பாதுகாப்பு சிகிச்சை'யைத் (Palliative care) தருகிறார்கள்.

**தடுப்பது எப்படி?**

புகைப்பதையும் புகையிலை கலந்த பொருள்களைப் பயன்படுத்துவதையும் தவிர்க்கவேண்டும். மது அருந்தக்கூடாது. அதிக காரமான, சூடான, உப்பு அதிகமுள்ள உணவுகளைக் குறைத்துக் கொள்ள வேண்டும். சிறுதானிய உணவுகள், முழுதானிய உணவுகள், நார்ச்சத்து நிறைந்த காய்கறிகள் மற்றும் பழங்களை அதிகப்படுத்தவும். பாக்கெட் உணவுகளுக்கும் பதப்படுத்தப்பட்ட உணவுகளுக்கும் 'நோ' சொல்லுங்கள்.

உள்ளி, வெங்காயம், அவரைக்காய், பட்டாணி, சுண்டல், காளான் ஆகியவற்றுக்கு புற்றுநோயைத் தடுக்கும் ஆற்றல் உண்டு. இந்த உணவுகளை அதிகப்படுத்துங்கள். குளத்து மீன் குழம்பு நல்லது. வறுத்த அசைவம் வேண்டாம். சமைக்கும்போது கருகிப்போன உணவுகளை உண்ணாதீர்கள். காரணம், அந்தக் கருகலில்தான் புற்று நோயை உருவாக்கும் காரணிகள் குடியிருக்கும். தினமும் ஓர் உடற்பயிற்சி செய்யுங்கள்.

எந்த வயதானாலும் சரி, பசி குறைந்து, உடல் எடை குறைகிறது, குருதியும் குறைகிறது என்றால் உடனே எண்டோஸ்கோப்பி மற்றும் கொலோனோஸ்கோப்பி பரிசோதனையைச் செய்து கொள்ளுங்கள். இதன் பயனால், இரைப்பை / குடல் புற்றுநோயைத் தடுக்க முடியும் புற்றுநோய் இல்லாத உலகத்தைக் காணவும் முடியும்.



மரபுகளையும் அடுத்த சந்ததியினருக்குக் கை மாற்றி வருகிறார்கள்.

இம் மக்களுக்கு தம் மூதாதையர்கள் மிகுந்த மதிப்புக்குரிய வர்கள் ஆவர். அதற்குக் காரணம் அவர்கள் வயதினால் பெரியவர்கள் என்பது மாத்திரமன்றி தாம் வாழும் நிலத்தினுடைய ஆத்மாவின் (தண்ணீர், மரங்கள், பறவைகள், விலங்குகள் மற்றும் எல்லாமும்) வரலாற்றை - தாங்கள் எவ்வாறு உருவாகி இன்றுவரை உயிர்த்திருக்கிறோம் என்ற உண்மையை - தம் முதல் மூதாதையரிடம் இருந்து அறிந்து அதனைத் தொடர்ச்சியாக இன்றுவரை அடுத்த சந்ததியினருக்குச் சொல்லி வந்தவர்கள் என்பதனாலும் அவர்களை இம்மக்கள் மிகவும் பெருமையோடும் புனிதத்தோடும் மதிக்கிறார்கள்.

அவர்கள் வழியாகவே 65,000 வருடங்களுக்கு மேற்பட்ட இந்த உயிரினங்கள், பயிர்கள், தண்ணீர் போன்ற இயற்கை வளங்கள், வாழ்க்கை எல்லாம் தோன்றி இன்றுவரை இப்படியாக இருக்கிறது என்பதற்கெல்லாம் அவர்களிடம் பல மூதாதையர் வழிவந்த தனித்துவமான கதைகள் உள்ளன. அதில் ஒன்றுதான் இன்று நான் உங்களுக்குச் சொல்லப் போகிற கதை.



மண்ணினதும் மக்களதும் வரலாற்றுக் கதைகள் தம்மை வந்து அடைந்திருக்கின்றன என்பது அவர்களது நம்பிக்கையாகும். இம் மக்கள் இந்தத் தேசத்தில் 65,000 வருடங்களுக்கு முன்பிருந்தே வாழ்ந்து வருவதாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது என்றால் ஆச்சரியமாக இருக்கிறதல்லவா?

அவ்வாறு கைமாறி, கைமாறி வந்த கதைகளில் பல மிக இரகசியமானதாகவும், சுவாரசியமானதாகவும் இருக்கின்றன. எப்படி இந்த உலகம்,


கட்டூம்பா (Katoomba) என்ற சிட்னியின் மேற்குப் பகுதியில் அமைந்திருக்கிற மூன்று குன்றுகளாக உயர்ந்து நிற்கும் மூன்று மலைகளும் ஏன் இப்படி ஆகின என்பது பற்றிய ஆதிக் கதை இது.

இயற்கை தன் கதையை மூதாதையரான ஒரு மனிதனுக்குச் சொல்லி அவரிடமிருந்து பரம்பரை பரம்பரையாக இக்கதை அடுத்த சந்ததியினருக்குச் சொல்லப்பட்டு இன்று வரை நிலைத்து நிலவி வருகிறது. அந்தக் கதையை நாமும் இன்று அறிந்து கொள்வோமா?

கட்டூம்பா (Katoomba) என்ற பழங்குடி இனக்குழுவில் மீஹ்னி (meeh-ni), விம்லாஃ (wimlah), குன்னீடு (gunnedoo) என்று மூன்று மிக அழகிய சகோதரிகள் தம் குடும்பத்தாரோடு வாழ்ந்து வந்தார்கள். அந்த மூன்று அழகிகளையும் திருமணம் முடிக்க பொருத்தமானவர்கள் எவருமே அந்த ஊரில் இருக்கவில்லை. இது பற்றிய செய்தி அயல் பிரதேசங்கள் எல்லாம் பரவியது. பலரும் அவர்களைத் திருமணம் செய்ய விரும்பினார்கள்.

கட்டூம்பா இனத்திலும் பலர் அவர்களது இதயத்தைக் கவர்ந்து திருமணம் முடிக்க முயன்ற போதும் அது நிறைவேறவில்லை. அவர்களைக் கடத்திச் செல்ல எடுத்த முயற்சிகளும் கைகூடவில்லை.

துரதிர்ஷ்டவசமாக நேப்பியன் (nepean) இனக்குழுவில் இருந்த மூன்று இளைஞர்களே இக் கன்னிப் பெண்களின் மனதைக் கவர்ந்தவர்களாக விளங்கினார்கள். ஆனால் அங்கு ஒரே இனக்குழுவைச் சேர்ந்த மக்கள் தமக்குள் மாத்திரமே திருமணம் செய்து கொள்ளலாம் என்ற சட்டம் இருந்தமையால் திருமணத்தைச் செய்வதில் தடை இருந்தது. நேப்பியன் இனக்குழுவிலும் அப்படியான தடைச் சட்டமே இருந்ததால் என்ன செய்வது என்று தெரியாமல் தடுமாறி இறுதியில் தம் மூதாதையரின் தடையை மீறி இம் மூன்று பெண்களையும் திருமணம் செய்ய அந்த மூன்று இளைஞர்களும் தீர்மானித்தார்கள். அதனால் பெரும் சண்டை மூண்டது.





# விளாம்பழக் கலவை

எமது மண்ணில் விளைந்தும் பலர் கவனிக்காமல் விடும் பழம் விளாம்பழம். விளாம்பழத்தை விரும்பிச் சுவைப்போர் அரிது. விளாம்பழத்தில் உள்ள ஊட்டங்கள் அதிகம். உரம் சேர்க்காமல், கிருமி நாசினி இடாமல் கிடைக்கும் பழம் அது. இரும்புக் கவசம்போல உள்ள அதன் ஓடு விளாம்பழத்தைப் பாதுகாத்துத் தருகிறது. அத்தகைய விளாம்பழத்தை நாடுவோர் குறைவு என்றாலும் விளாம்பழத்தைப் பானமாக வாங்கி அருந்துவோர் அதிகம். பழச்சாறுப் போத்தல்களாக விளாம்பழத்தை அடைத்து இரசாயனங்கள், வாசனை கலந்து, பதனிட்டு லாபம் சம்பாதிக்கும் நிறுவனங்கள் இங்கு அதிகம். விளாம்பழத்தை வெறுமனே ருசிக்கப் பின்னடிப்பவர்களுக்கு இந்தப் பழக்கலவை விளாம்பழம் மீது விருப் பத்தை உண்டாக்கவே செய்யும்.



*சமையல்*
*சமையல்*



**தேவையான பொருள்டகள்**

நன்கு கனிந்த விளாம்பழம் - 1, சீனி - 1மேசைக் கரண்டி, பசுப் பால் - 2 மேசைக் கர ண்டி (பசுப்பால் இல்லதா விடத்து தேங்காய்ப் பால், பால்மா ஆகியவற்றைப் பயன்ப டுத்தலாம்).

**எப்படிச் செய்வது…?**

முதலில் விளாம்பழத்தை உடைத்துப் பழத்தின் சதை யைக் கரண்டி ஒன்றைப் பயன்படுத்தி வெளியே எடுங்கள். உங்களிடமுள்ள மின் அரைப்பானில் (மிக்சி) அதனுடன் சீனி மற்றும் பசுப்பால் ஆகியவற்றைச் சேர்த்து அரைத்துக் கொள்ளுங்கள். அரைத்ததும் பாத்திரம் ஒன்றில் எடுத்து ருசி பாருங்கள். விளாம்பழத்தை வெறுமையாக உண்ணப் பின் னடிப்பவர்களுக்கும் பிடித்துப்போகும் ருசியாக இருப்பதால் இதை அனைவரும் விரும்பி உண்பர்.

இதனால் கட்டூம்பா இனக்குழுவில் மிகுந்த குழப்பம் நிலவியது. அங்கு இருந்த ஒரு மந்திர வாதி போர் முடியும் வரை இப்பெண்களை அந்த இளைஞர்களிடம் இருந்து மறைப்பதற்காக தன் மந்திரசக்தியால் அவர்களை மலைகளாக்கி விட் டான்.

ஆனால் அந்த போரில் மந்திரவாதி இறந்து விட்டதால் இந்தப் பெண்களை மீண்டும் பெண்க ளாக எவராலும் உருமாற்ற முடியவில்லை. அவர் கள் இன்றும் மலைக் குன்றுகளாகவே இருக்கி றார்கள். அவர்கள்தான் நாம் இன்றும் பார்க்கும் நீல மலையில் (blue Mountain) உள்ள மூன்று சகோதரிகள் (three sisters) மலைத் தொடராகும். என்பது அவர்களிடம் வழங்கி வரும் ஒரு கதை யாகும்.

தொடக்கத்தில் இந்தப் பிரதேசத்தில் இருந்த பழங்குடி மக்கள் இன்று அங்கு இல்லை. அந்த இடங்கள் எல்லாம் இப்போது பல வந்தேறு குடி களால் அபகரிக்கப்பட்டுவிட்டது. எங்களைப் போன்ற பல வெளிநாட்டு குடிமக்ககளே இங்கு இப்போது வாழ்கிறோம். இருந்தாலும் அப்பழங் குடி மக்களின் அவ் இனக்குழுக்களின் பெயரைத் தரித்தபடி அந்த இடம் இன்றும் கட்டூம்பா (Katoomba) என்றும் நேப்பியன் பழங்குடி மக் கள் வாழ்ந்த பகுதி நேபியன் என்றும் அழைக் கப்பட்டுவருகிறது.

அது மட்டுமன்றி அவுஸ்திரேலியாவில் பொது நிகழ்வுகள் எதுவாக இருந்தாலும் அது நடைபெறு வதற்கு முன்னர் அவர்களை நினைவுகூர்ந்து நாட்டுக்கும் நிலத்துக்கும் அங்கு வாழ்ந்த மக்க ளுக்கும் மரியாதை செலுத்தும் நிகழ்வு நடை பெற்றே நிகழ்ச்சிகள் யாவும் தொடங்கப்படுவது வழக்கம். அதனை acknowledgement of coun- try ('அக்னொலேட்ஜ்மன்ட் ஒஃ கன்றி' )என்று அழைப்பது வழக்கம்.

நான் இன்றய இந் நிகழ்வினை ......(குறிப் பிட்ட இந்த இடத்தில் வாழ்ந்த இனக்குடி மக்க ளின் இனப்பெயரைக் குறிப்பிட்டு)மக்களின் பாரம்பரிய மண்ணில் நின்றபடி என் மரியாதையை இங்கு வாழ்ந்த, வாழ்ந்து கொண்டிருக்கிற அம் மக்களுக்கு அளித்து இந்த நிகழ்ச்சியைத் தொடங்குகின்றேன் என்று சொல்லி நிகழ்ச்சியை தொடங்குவது ஒரு சம்பிரதாய வழக்கமாகும்.

இந்த மரபார்ந்த வணக்க நிகழ்வே அவர்களின் மண்ணில் நிற்கும் நாம் அவர்களுக்கு அளிக்கும் மரியாதையுமாகும்.

இன்று அவர்களுடைய மூதாதையர்களிடம் இருந்து பல்லாயிரம் வருடங்களாக கைமாறி கைமாறி அவர்களை வந்தடைந்து இன்று நம் எல்லோருக்கும் தெரிந்த அந்தக் கதை உங்களுக் குப் பிடித்திருக்கிறதா?

உங்களுடைய ஊரினது பெயர் என்ன? அதற் கும் இப்படி ஏதாவது கதைகள் உள்ளனவா? அப் படி என்றால் அதை உங்கள் பெற்றோரிடம் கேட்டு அதனை கதையாக எழுதி எங்களோடு பகிர்ந்து கொள்ளலாமே?

சுரேந்தர் ரவி

# 5ஜி தொழில்நுட்பத்தின் சாதகமும் பாதகமும்

இருபத்தொன்றாம் நூற்றாண்டில் மிகப் பெரும் வளர்ச்சி கண்டு வருகிறது தொலைத்தொடர்புத் துறை. முதல் தலைமுறையில் தொடங்கி தற்போது நான்காம் தலைமுறை (4ஜி) அலைக்கற்றை பயன்பாட்டில் உள்ளது. விரைவில் ஐந்தாம் தலைமுறை (5ஜி) அலைக்கற்றை பயன்பாட்டுக்கு வரவுள்ளது.

5ஜி அலைக்கற்றையை விரைவில் பயன்பாட்டுக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை அனைத்து தொலைத்தொடர்பு நிறுவனங்களும் மேற்கொண்டு வருகின்றன. முதல்கட்டமாக அவை முக்கிய நகரங்களில் பயன்பாட்டுக்கு வரும் என்றும், பின்னர் படிப்படியாக கிராமங்களைச் சென்றடையும் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கான சிமாட்போல் எனப்படும் தூண்கள் யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்டதும் அது பின்னர் சர்ச்சையாக்கப்பட்டதும் ஞாபகத்தில் இருக்கலாம். முன்னர் இதனை எதிர்த்த அரசியல் தரப்பினர் பின்னர் ஆட்சிக்கு வந்ததும் அதே திட்டத்தைத் செயல்படுத்த மும்முரமாக நின்றனர் என்பதும் வேறு ஒரு தனிக்கதை. எனினும் இனி வரும் காலத்தில் 5ஜி தொழில்நுட்பம் தவிர்க்க முடியாததாகிவிடும்

அதேவேளையில், 6ஜி குறித்த பேச்சுகளும் தொடங்கிவிட்டன. நாட்டில் 6ஜி தொழில்நுட்பம் 2030-ஆம் ஆண்டுக்குள் அறிமுகப்படுத்தப்படும் என இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அண்மையில் தெரிவித்தார்.

4ஜி-யில் இருந்து 5ஜி-க்கான மாற்றம் தொடங்கியுள்ள நிலையில், 5ஜி அலைக்கற்றைத் தொழில்நுட்பத்தின் முக்கிய சாதக பாதகங்கள் குறித்து காண்போம்.

**அதிவேகம்**

அலைபேசி உள்ளிட்டவற்றின் செயல்திறன் 4ஜி-யை காட்டிலும் 5ஜி தொழில்நுட்பத்தில் வேகமாக இருக்கும். படங்கள், காணொலிகள், இசைத் தொகுப்புகள் உள்ளிட்டவற்றை சில விநாடிகளில் பதிவிறக்கம் செய்துவிட முடியும். இணையசேவை வேகமாகக் கிடைக்கும் என்பதால், தானியங்கி இயந்திரங்கள், ரோபோக்கள் உள்ளிட்டவற்றின் செயல்பாடும் மேம்படும்.

**விரைவான தரவுப் பகிர்வு**

செயற்கை நுண்ணறிவு, மெய்நிகர் தொழில்நுட்பம் உள்ளிட்டவை 4ஜியை காட்டிலும் 5ஜி-யில் மிகச் சிறப்பாகச் செயல்படும். இணையத்தில் தரவுகளைத் தேடுவதும் மிக சுலபமாகும். அதில் எந்தவித தாமதமும் ஏற்படாது. 5ஜி தொழில்நுட்பத்தின் மூலமாக தரவுகளை ஓரிடத்தில் இருந்து மற்றோர் இடத்துக்கு மிக வேகமாகப் பகிர முடியும்.

**அதிக தரவுக் கையாளுகை**

4ஜி அலைக்கற்றையுடன் ஒப்பிடுகையில் 5ஜி அலைக்கற்றையானது சுமார் 100 மடங்கு அதிக தரவுகளைக் கையாளும் திறன் கொண்டது. அதன் காரணமாக கைப்பேசி, மடிக்கணினி, கணினி உள்ளிட்டவற்றின் செயல்பாடு மேம்படும். இணையசேவையின் திறனும் மேம்படும்.



**அதிக அலைவரிசை**

5ஜி அலைக்கற்றையின் அலைவரிசை (பேண்ட்விட்த்) அதிகமாக இருப்பதால், அதிகப்படியான தரவுகளைக் குறைந்த நேரத்தில் பகிர முடியும். அதனால் இணைய சேவையின் வேகம் அதிகரிக்கும்.

**புத்தாக்கம் மேம்படும்**

ட்ரோன்கள், சென்சார் சார்ந்த பயன்பாடுகள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. தற்போதைய நிலையில் 5ஜி அலைக் கற்றையின் வருகை, தொழில்நுட்பம் சார்ந்த புத் தாக்கச் சூழலை மேலும் வலுப்படுத்தும். மக்கள் சந்தித்து வரும் பல்வேறு பிரச்னைகளுக்குத் தொழில்நுட்பம் சார்ந்த தீர்வுகள் எளிதில் காணப்படும்.

தொலைத்தொடர்பு கோபுரத்தின் தேவை குறையும்

4ஜி அலைக்கற்றை தொலைத்தொடர்பு கோபுரங்களை அடிப்படையாகக் கொண்டவை. குறிப்பிட்ட இடத்தில் வெவ்வேறு நிறுவனங்களின் கோபுரங்கள் அதிக எண்ணிக்கையில் இருப்பது, இணையசேவையின் வேகத்தைக் குறைத்துவிடுகிறது. 5ஜி அலைக்கற்றைக் கருவிகளைத் தெருவிளக்கு கம்பங்களிலேயே பொருத்திவிட முடியும். அதனால், இணையசேவையின் வேகம் அதிகரிக்கும்.

இவையெல்லாம் 5ஜி அலைக் கற்றைகளால் ஏற்படக்கூடிய சாத கங்கள். எல்லாவற்றிலும் போலவே இதிலும் பாதகங்களும் உண்டு.

**குறைந்த தொலைவு**

4ஜி அலைக்கற்றையுடன் ஒப்பிடுகையில் 5ஜி அலைக்கற்றை குறைந்த தொலைவுக்கே பய ணிக்கும். கட்டடங்கள், மரங்கள், மழை உள்ளிட்டவை 5ஜி அலைக் கற்றையின் வேகத்தைக் குறைக்க வாய்ப்புள்ளது. அதன் காரணமாக 5ஜி அலைக்கற்றையை வழங்கும் கருவிகளை அதிக இடங்களில் பொருத்த வேண்டிய சூழல் ஏற் படும்.

**பதிவேற்ற வேகம் குறைவு**

5ஜி அலைக்கற்றையைப் பயன்படுத்தி பல்வேறு தரவுக ளைக் குறைந்த நேரத்தில் பதிவி றக்கம் செய்துவிட முடியும் என் றாலும், தரவுகளை இணையத்தில் பதிவேற்றம் செய்வதற்கு நீண்ட நேரம் ஆகும். விநாடிக்கு 100 மெகா பைட் (எம்.பி.) என்ற அளவிலேயே பதிவேற்ற வேகம் இருக்கும்.

**பேட்டரி வலுவிழப்பு**

கைப்பேசி உள்ளிட்டவற்றின் பேட்டரி திறனை 5ஜி அலைக்கற்றை வேகமாகக் குறைத்துவிடுவதாக நிபுணர்கள் கூறுகின்றனர். அதன் காரணமாக பேட்டரியின் ஆயுள் காலம் குறைவதோடு கைப்பேசியை அடிக்கடி மாற்ற வேண்டிய சூழல் ஏற்படலாம் என்றும் கூறுகின்றனர்.

அதனால் 5ஜி தொழில்நுட்பத்துக்கு ஏற்றவாறு பேட் டரியின் திறனை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் கைப்பேசி நிறுவனங்கள் ஈடுபட வேண்டியது அவசியம் என்றும் நிபுணர்கள் வலியுறுத்துகின்றனர்.

**இணையவழி குற்றங்கள்**

5ஜி அலைக்கற்றையின் அலைவரிசை அதிகமாக இருப்பதால், அதில் இருந்து தரவுகளை எளிதில் திருட முடியும். அதன் காரணமாக இணையவழி குற்றங்களின் எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்புள்ளது. 5ஜி அலைக்கற் றையின் வாயிலாக ஒரே நேரத்தில் பல்வேறு கருவிகளைத் தொடர்புகொள்ள முடியும் என்பதால், அவற்றில் இருந்து தரவுகளைத் திருடுவதும் எளிதாகும் என நிபுணர்கள் எச்ச ரிக்கின்றனர்.

அத்தகைய தரவுத் திருட்டைத் தடுப்பதற்கான பாது காப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்குத் தொலைத்தொடர்பு நிறுவனங்கள் கூடுதல் முதலீடுகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும் என்றும் நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

**அதீத செலவினம்**

5ஜி அலைக்கற்றைக் கருவிகளை அதிக அளவில் பொருத்த வேண்டியிருப்பதால், தொலைத்தொடர்பு நிறு வனங்களுக்கான முதலீடும் செலவினமும் அதிகரிக்கும். 5ஜி கருவிகளின் பராமரிப்புச் செலவும் அதிகமாக இருக் கும் என நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். வாடிக்கையா ளர்களும் 5ஜி சேவையைப் பெற 5ஜி தொழில்நுட்பம் செயல்படும் புதிய அறிதிறன்பேசியை வாங்க வேண்டும்.




**சமச்சீரற்ற வளர்ச்சி**

5ஜி தொழில்நுட்பம் தொடக்கத்தில் நகரங்களில் மட்டுமே பயன்பாட்டுக்கு வரவுள்ளது. அத்தொழில்நுட்பம் நாட்டில் உள்ள அனைத்துக் கிராமங்களையும் சென்றடைய இன்னும் பல ஆண்டுகள் ஆகும் என நிபுணர்கள் தெரி விக்கின்றனர். இத்தகைய சூழல் ஊரக-நகர்ப்புறப் பகுதிகளுக்கு இடையேயான இடைவெளியை அதிகரிக்க வாய்ப்புள்ளது.

# கடனின்றி வாழக் கற்றுக்கொள்வோம்!

**பத்ரி**

மனிதனின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, இடம், கல்வி, ஆரோக்கியம் ஆகியன வற்றைப் பெற்றிருந்தாலே நாம் மகிழ்ச்சியாக வாழ முடியும். வாழ்க்கையில் தேவையில்லாததை கைவிடுவதும், தேவையில் மட்டும் கவனம் செலுத்துவதும் மிகவும் முக்கியம். அன்றாட வாழ்வில் அடிப்படை தேவைகளில் எளிமையைக் கடைப்பிடித்தால், பிற்காலத்தில் ஏற்படக்கூடிய பொருளாதார சிக்கல்களை நம்மால் தவிர்க்க முடியும்.

திருமணமானதும் ஒரு முழுமையான புதிய வாழ்க்கை முறைக்கு குடும்பத் தலைவர்கள் தங்களைப் பொருத்திக் கொள்ள வேண்டும். தனக்கு முந்தைய தலைமுறை, தனது தலைமுறை, தனக்கு அடுத்த தலைமுறை என மூன்று தலைமுறைகளைப் பராமரிக்க வேண்டிய கட்டாயத்தில் இருப்பவர்கள் இவர்கள். எனவே, வாழ்க்கைத் துணையுடன் ஆலோசித்து நிதி நிர்வாகம் பற்றிய தெளிவான சிந்தனையுடன் வாழ்க்கையைத் தொடங்குவது நல்லது.



இருவரும் ஒவ்வொரு மாதமும் ஏற்படும் வரவு,செலவு சேமிப்பு, கடன் இவற்றை பற்றிய விவரங்களில் வெளிப்படைத் தன்மையுடன் இருக்க வேண்டும். கடனின்றி வாழ வேண்டுமானால், எப்போது, யார், எவ்வளவு செலவழிக்க வேண்டும் என்பதில் சரியான முடிவு எடுக்க வேண்டும். வங்கி ஒன்றில் ஒரு கூட்டுக் கணக்கை மின்னஞ்சல் முகவரியுடன் தொடங்குவது நல்லது. அந்த வங்கிக் கணக்குகள் தொடர்பான கட்டண அறிக்கைகள், இதர செலவுகளைப் பற்றி இருவரும் விழிப்புணர்வுடன் இருக்கவேண்டும்.

நிதி சார்ந்த விடயத்தில் வருமானத்திற்குள் வாழக் கற்றுக் கொள்வது மிக முக்கியமானது. மேலும், எதிர்பாராத சூழ்நிலைகளை சமாளிக்க நிதி நிலைமை தயாராக இருக்கும் நிலையை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். இது இருவருக்கும் எளிதில் பணமாக்கக்கூடிய ஒரு நிதித் திட்டமாக இருக்க வேண்டும்.

கடன் இருந்தால் சேமிப்பில் உள்ள பணத்தைக் கொண்டு, அதிலிருந்து விரைவாக வெளியே வர முயற்சிகள் எடுக்கவேண்டும். தேவைப்படும் பொருட்களை மாதக் கடனில் வாங்குவதைத் தவிர்த்து, கடனில்லாமல் கையிலிருக்கும் காசைக் கொண்டு வாங்கலாம். ஆடம்பர வாழ்வை தவிர்த்து, குடும்பத்தில் உள்ளவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து வாடகை வீடு, வாகனம், பிற பொருட்களைத் தேர்ந்தெடுக்கவேண்டும்.

குறைந்த நபர்கள் கொண்ட குடும்பத்துக்கு பெரிய வீட்டை வாடகைக்கு தேர்ந்தெடுப்பது, பயன்பாடு குறைவாக இருந்தும் தேவையில்லாமல் தவணை முறையில் வாகனங்களை வாங்குவது, கடன் அட்டைகளை அடிக்கடி பயன்படுத்துவது போன்றவற்றை தவிர்ப்பது நல்லது.

பல குடும்பங்களில் மனைவிக்கு அன்றாடச் செலவுகளைத் தவிர்த்து இதர பண விஷயங்களைப் பற்றி விழிப்புணர்வில்லாமல் இருப்பது துரதிருஷ்டவசமானது. ஏதேனும் நெருக்கடி நிலை ஏற்படும்போது மனைவி இப்படி இருப்பது பெரும் சிக்கல்களுக்கு வழிவகுக்கும். மேலும் அந்த பெண் குடும்ப நிதி, நிலுவையிலுள்ள கடன், காப்பீட்டுத் தொகை போன்ற எதைப் பற்றியும் அறியாமல் இருப்பார். இதனால், குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் உருவாகி பெரிய பிரச்சினைகளுக்கு வழிவகுக்கலாம்.

ஆவணப்படுத்துதலில் உள்ள சிக்கல்கள் காரணமாக பெண்கள் பெரும்பாலும் தங்களுடைய பெயரை கணவனின் வாரிசு என்று பதிவு செய்யாமல் விட்டு விடுகிறார்கள். பெண்கள் தங்கள் வாழ்க்கைத் துணைவரின் வாரிசாக தங்களை அனைத்து ஆவணங்களிலும் பதிவு செய்து கொள்ளவேண்டும். நிதி சார்ந்த அனைத்து இடங்களிலும் புதிய விவரங்களை பதிவு செய்து கொள்வது, பிற்காலத்தில் ஏற்படும் பிரச்சினைகளைத் தவிர்க்கும்.

திருமணத்திற்குப் பிறகு காப்புறுதியை அதிகரிக்கவும், குடும்ப ஆரோக்கிய காப்பீட்டுத் திட்டத்தைத் தேர்ந்தெடுக்கவும் முனைப்புகள் காட்டலாம். இருவரின் பெற்றோருக்கும் மருத்துவக் காப்பீடு இருப்பதை உறுதிப்படுத்திக்

கொள்ளவேண்டும். அவர்களுக்கு வயது அதிகரிப்பதைப் போலவே மருத்துவ செலவுகளும் அதிகரிக்கும் என்பதை நினைவில் கொண்டு, அதற்கான ஒரு ஏற்பாட்டைச் செய்துகொள்ளவேண்டும்.

மூத்த குடிமக்களுக்கான பல்வேறு ஆரோக்கிய காப்பீட்டுத் திட்டங்கள் இருக்கின்றன. குழந்தைகளைஅரசுப் பள்ளியில் சேர்த்து படிக்க வைத்தல், அரசு பேருந்துகளில் பயணம் செய்தல், அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை எடுத்துக் கொள்ளுதல், எல்லா பணப்பரிவர்த்தனைகளையும் இணையவழியில் செய்தல், வீட்டிற்கு ஒரு தரைவழி தொலைபேசி பயன்பாடு போன்றவை செலவுகளைக் குறைக்கும்.

குடும்பச் செலவைக் கண்காணிப்பது அவர்களை கடனற்றவர்களாக மாற்றும். ஒரு மாதத்தில், செய்த அனைத்து செலவுகளையும் சரிபார்த்து பதிவு செய்வதன் மூலம், வரவு,செலவு பற்றிய தெளிவான புரிதல் இருவருக்கும் இருக்கும். இது தேவையற்ற செலவுகளை குறைத்து, அவர்கள் கடன்களிலிருந்து விரைவில் விடுபட உதவும்.

இது அவர்களின் செலவுகளைக் கட்டுப்படுத்துவது மட்டுமல்லாமல், நல்ல தொகையைச் சேமிக்கவும் உதவும். இதன் மூலம், அவர்கள் அடைய விரும்பும் வீடு கட்டுதல் போன்ற இலக்குகளை அடையவும், வாய்புள்ள முதலீட்டுத் திட்டங்களை முறையாக செயல்படுத்தவும் முயற்சிக்கலாம்.

பணத்தைக் கையாள்வதில் நாம் குழந்தைகளுக்கு முன்மாதிரியாக இருக்கவேண்டும். அவர்கள் கேட்பதை தேவையிருந்தால் மட்டுமே வாங்கித் தர வேண்டும். அவர்களுக்கு உண்டியல் ஒன்றை வாங்கிக் கொடுத்து சேமிக்கும் பழக்கத்தை கற்றுக் கொடுக்கலாம். சிக்கனமாக வாழவும், நமது வருமானத்தை உயர்த்தவும் வழிகளை கண்டு பிடிக்க வேண்டும்.

**கடனில்லாமல் வாழ்கிறேன் என்ற நினைப்பு தரும் நிம்மதியை உணர்ந்தோர் கடன் வாங்கி பொருள் சேர்க்க ஆசைப்படமாட்டார்கள்**

கடனில்லாமல் வாழ்கிறேன் என்ற நினைப்பு தரும் நிம்மதியை உணர்ந்தோர் கடன் வாங்கி பொருள் சேர்க்க ஆசைப்பட மாட்டார்கள். கடன் என்ற சொல்லைக் கேட்கவே மனம் அஞ்சி கலங்க வேண்டும். கடனிலும், தவணை முறையிலும் ஒருபோதும் பொருள்களை வாங்கக் கூடாது. தள்ளுபடி என்னும் கொடிய வலையில் சிக்க வைக்கும் இன்றைய உலகத்தில், மன உறுதி இருந்தால் மட்டுமே இது சாத்தியம்.

கடன் பட்டார் நெஞ்சம் போல் கலங்கினானாம் இலங்கை வேந்தன். வேந்தனுக்கே அந்த நிலை என்றால், கடன்பட்டால் நம் நிலை என்ன? எனவே, கடனின்றி வாழ்வோம். கவலையின்றி வாழ்வோம்.

---

## மெனிக்கே...

டப்பட்டுள்ள படத்தில் இந்தப் பாடல் இடம்பெறுகின்றது. நடிகர் சித்தார்த் மல்கோத்திரா, நடிகை நாரா பாஃட்டி ஆகியோர் நடிக்கும் இந்தப் படத்தின் முதல் தனிப் பாடல் வெள்ளிக்கிழமை வெளியானது.

பாடல் வெளியீட்டையொட்டி இந்திய ஊடகங்களிடம் பேசிய பாடகி ஜொகானி, இந்தி மொழியைக் கற்றுக் கொண்டு பாடாலைப் பாடுவது பெரிய சவாலாக இருந்தது எனத் தெரிவித்தார். "நான் இந்திப் பாடல்கள் கேட்டு வளர்ந்தவள்தான். ஆனாலும் ஒரு திரைப்படத்திற்கான பாடலைப் பாடுவதென்பது மிகச் சவாலாகவே




இருந்தது. மொழி உச்சரிப்பு, அதன் தொனி, பரிமாணம் என எல்லாமே மாற்றம் பெற்றிருந்தன. இதுபோன்ற தொன்றை இதற்குமுன்னர் நான் செய்ததில்லை" என்றார் ஜெகானி.

---

## பல்கலை...

வழங்குவதற்குத் திட்டமிடப்படுவதாக துணைவேந்தர் எம்.டி.லாமவன்ஸ தெரிவித்தார்.

பல்கலைக்கழகத்தின் 2, 3 மற்றும் 4ஆம் வருடங்களில் கல்வி கற்கும் சுமார் 300 மாணவர்களுக்கு இந்தப் பகுதி நேர வேலையை வழங்குவதற்குத் திட்டமிடப்படுகின்றது. முதலாமாண்டு மாணவர்களிலும் யாராவது பகுதிநேர வேலை வேண்டும் என்று விரும்பினால் அந்தக் கோரிக்கைகளையும் பரிசீலிக்க பல்கலைக நிர்வாகம் தாயராகவே -இருப்பதாகவும் கூறப்பட்டது.

மாணவர் ஒருவர் மாதம் ஒன்றுக்கு 15 முதல் 20 மணித்தியாலங்கள் பகுதி நேர வேலை பார்ப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள் என்று துணை வேந்தர் தெரிவித்தார்.

இலங்கையின் பல்கலைக்கழக வரலாற்றில் அரச பல்கலைக்கழகம் ஒன்று தனது மாணவர்களுக்குப் பகுதி நேர வேலை வழங்குவதற்கு முன்வந்திருப்பது இதுவே முதல் தடவை. எனினும் மாணவர்களுக்கான வேதன விவரங்கள் குறித்து உடனடியாக எந்த அறிவிப்பும் வரவில்லை.

நட்சத்திரா

# ஏன்...?

# அப்படி...?

32




## மரங்களில் இரவில் ஏன் பழங்கள், காய்கள், பூக்கள் பிடுங்கக்கூடாது?

விளக்கு வைத்தால் அல்லது இருட்டிவிட்டால் மரங்களில் காய்கள், பழங்கள், பூக்கள் என எதையும் பிடுங்கக்கூடாது என்று மூத்தவர்கள் அழுத்தம் திருத்தமாகக் கூறுவதுண்டு. இதற்குப் பல பின்னணிக் காரணங்கள் இருக்கின்றபோதிலும் அது மரத்துக்குக் கூடாது, அது அப்படித்தான் என்று சாட்டுப்போக்குச் சொல்லி முடித்துவிடுவார்கள். இதற்கான உண்மையான காரணங்கள் என்னவென்று தேடிப்பார்த்தால், இரவில் மரங்களில் எதையாவது பிடுங்க முயற்சித்தால் மரத்தில் குடிகொண்டிருக்கும் குழவிக் கூடுகள் கலைந்து குழவி கொட்டவும், இரவில் மரத்தில் தங்குகின்ற வேறு சில விச ஜந்துகள் பிடுங்குபவருக்குப் பாதிப்பை ஏற்படுத்தவும் வாய்ப்புண்டு என்பதாகவே அமையும்.


அத்தோடு இரவில் பழம் எது காய் எது என்று தெரியாத நிலையிருப்பதால் இலக்கின்றிப் பிடுங்கிப் பூக்கள், பிஞ்சுகள் கொட்டிவிடவும் கொப்புகள் முறியும் ஆபத்துகளும் உள்ளன. இரவில் பிடுங்குவதால் அந்த மரத்தில் கூடுகட்டி முட்டையிட்டுக் குஞ்சுகளுடன் இருக்கும் பறவைகளுக்கு அது இடையூறாக இருப்பதுடன், கூடுகள் அறுந்துவிழுந்து முட்டைகள் உடையவும் குஞ்சுகள் வீழ்ந்து சாகவும் வாய்ப்புண்டு. மரங்களுக்கும் உயிருண்டு என்பதால் இரவில் அதன் உறங்குநிலை அல்லது ஓய்வைக் குழப்பக்கூடாது என்ற எண்ணமும் இதற்கு ஒரு காரணமாகும்.

இவ்வாறான பல காரணங்களால்தான் இரவில் மரங்களில் பழங்கள், காய்கள், பூக்களைப் பிடுங்கக்கூடாது என்று முன்னோர்கள் சொல்லி வைத்தனர். ஆனால், உண்மையான காரணங்களை விடப் பொய்யான காரணங்களே இன்றைக்குப் பிரபலமாகியிருக்கின்றன. மரங்களில் பேய், பிசாசுகள் இரவில் ஊசலாடும் என்று கிளப்பப்பட்டிருக்கின்ற பீதி இவற்றில் முக்கியமானது. இதைப் போன்ற ஒன்றுதான், "வேப்ப மர உச்சியிலே பேய் நின்று ஆடுதெண்டு விளையாடப் போகையிலோ சொல்லி வைப்பாங்கள்" என்ற பாடலிலும் கவிஞர் சொல்லியிருப்பதும்.





# பிரமாஸ்திரா




## பாராட்டுக்குரிய முயற்சி

பிரம்மாஸ்திரத்திற்கான யுத்தத்தில் வென்றது யார் என்பது தான் பிரம்மாஸ்திரா படத்தின் கதை வரி. அனைத்து அஸ்திரங்களுக்கும் மேலான உச்சபட்ச சக்தியை பெற்றிருக்கும் பிரம்மாஸ்திரத்தின் பாகங்கள் வெவ்வேறு நபர்களிடம் பிரிந்து கிடக்கின்றன. அதனை எப்படியாவது சேர்த்து பிரமாஸ்திரத்தின் சக்தியை பெற்றுவிடவேண்டும் என எதிரி கூட்டம் நினைக்கிறது. இந்த சம்பவங்களெல்லாம் ரன்பீர் கபூருக்கு காட்டப்படுகிறது. அவருக்கும் பிரமாஸ்திரத்திற்கும் என்ன சம்பந்தம்? அவருக்குள் இருக்கும் சக்தி என்ன? இறுதியாக பிரமாஸ்திரத்தின் பாகங்கள் ஒன்று சேர்ந்ததா? இல்லையா? என்பது தான் படத்தின் திரைக்கதை.

ஆங்கில மற்றும் சீனப் படங்கள் பல இதுபோன்று கதை அம்சங்களுடன் வந்துள்ளன. புராணங்களிலிருந்து ஒரு கதையை உருவாக்கும் இந்தப் போக்கு இந்திய திரை உலகிற்குப் புதிய வரவு என்றாலும் அது கவர்ச்சியான வரவாகவே இருக்கிறது.

இந்தியத் திரையுலகுக்கே உரியதான நாயகன் ஒரு ஏழையாகவும், நாயகி பணக்கார பெண்ணாகவும் இருக்கும் வடிவம் இதிலும் மாறவில்லை. அதில் நாயகனின் இரக்க மற்றும் ஏழ்மை நிலையை பார்த்த நாயகிக்கு காதல் தொற்றிக்கொள்ளும். அப்படியான புதுவித காதல் கதையைத் தான் இந்த படத்திலும் தொட்டிருக்கிறார் இயக்குநர் அயன் முகர்ஜி. படத்தில் பிரம்ம சக்தி, வானாஸ்திரம், நந்தியாஸ்திரம் போன்றவற்றையெல்லாம் தவிர்த்துவிட்டு பார்த்தால் காதல் முக்கியமான பங்கு வகிக்கிறது.

படம் நெடுங்கிலும் காதலை பற்றியே பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அந்த காதல் காட்சிகள் மிகவும் பலவீனமான முறையில் எழுதப்பட்டிருப்பதால், படம் பார்ப்பவர்களுக்கு அது சுத்தமாக ஒட்டவில்லை. கண்டதும் காதல் பாணியிலும், நாயகனின் கருணைகொண்ட உள்ளத்தின் அடிப்படையிலும் உடனே காதல் வயப்படும் பெண்கள் இருந்திருந்தால் என்ஜிஓ-க்கள் நடத்தும் எல்லோருக்கும் ஒன்றிற்கும் மேற்பட்ட காதல் இருந்திருக்க வேண்டுமே!?

படத்தில் ஆலியா பட்டுக்கும்- ரன்பீர் கபூருக்குமான காதல் காட்சிகள் வலிந்து திணிக்கப்பட்டுள்ளமை அயற்சி. தவிர படத்தின் மிகப்பெரிய பலம் அதன் தொழில்நுட்பக்குழு. பெரிய திரையில் கிராஃபிக்ஸ் காட்சிகளை 3டி தொழில்நுட்பத்தில் பார்க்கும்போது அட்டகாசமான திரையனுபவத்தை கொடுக்கிறது. சவுண்ட் எஃப்க்ட்ஸ், கமிரா, எடிட்டிங் என தொழில்நுட்ப ரீதியாக படத்தை நிச்சயம் பாராட்டலாம். ஆனால், அதை மட்டுமே வைத்து எவ்வளவு நேரம் ரசிக்க முடியும் என்ற கேள்வியும் எழாமலில்லை.

ரன்பீர் கபூர் தன்னுடைய மொத்த உழைப்பையும் செலுத்தி சிறப்பான நடிப்பை வெளிப்படுத்தியிருக்கிறார். அவருக்கு இணையாக இருந்தது ஆலியா பட்டின் நடிப்பு. சிறிது நேரம் திரையில் தோன்றினாலும் மிரட்டலான நடிப்பின் மூலம் ரசிகர்களின் கைத்தட்டலை பெறுகிறார் ஷாருக்கான். தனக்கான கதாபாத்திரத்தில் முழுமை சேர்த்திருக்கிறார். தவிர, அமிதா பச்சன், நாகர்ஜூனா நடிப்பு திரைக்கதையின் பலவீனத்தை மறைக்க உதவியிருக்கிறது. குறிப்பாக எதிர்மறை கதாபாத்திரத்தில் நடித்திருந்த மௌனிராய் வில்லியாக மிரட்டியிருந்தார். அழுத்தமான நடிப்பால் அச்சுறுத்துகிறார்.

படத்தின் முதல் பாதி மெதுவாக நகர்கிறது. படம் எதை நோக்கி செல்கிறது என்பதை புரிந்து கொள்ளவே இடைவேளை வரை காத்திருக்க வேண்டியிருக்கிறது. இடைவேளைக்கு முன்பாக காட்சிகள் சூடுபிடிக்கின்றன. ஆனால், இரண்டாம் பாதியில் தன்னுடைய திரைக்கதை பலத்தால் அந்த சூட்டையும் அணைத்திருக்கிறார் இயக்குநர்.

அதீத உரையாடலும், தேவையற்ற பாடலும், அயற்சி தரும் காதல் காட்சிகளும், பார்வையாளர்களை பாதிக்காத நாயகனின் ஃப்ளாஷ் பேக் மற்றும் எமோஷனல் காட்சிகளும் பெரும் சோகம். தவிர, இரண்டாம் பாதியில் கன்டென்டே இல்லாமல் இழுத்துச் சென்று நீண்ட நேரம் ஒரே இடத்தில் சுற்றிக்கொண்டிருந்து திரைக்கதையின் பலவீனத்தை உணர்த்தியது. படம் முடியும் போது இரண்டாம் பாகம் விரைவில் என்ற கார்டு போடப்படும் போது தான் உண்மையில் பார்வையாளர்களுக்கு அச்சம் தொற்றிக்கொள்கிறது.

இசையமைப்பாளர் ப்ரிதம் இசையில் பாடல்கள் நினைவில் நிற்கவில்லை. சைமன் ஃப்ராங்கல்ன் பின்னணி இசை சில இடங்களில் கைகொடுத்தது. தமிழ் டப்பிங்கில் ஆலியா பட்டின் குரலை கேட்க முடியவில்லை.

மொத்தத்தில் பார்வையாளர்கள் மீது பிரம்மாஸ்திரத்தை ஏவிவிட்டு வேடிக்கை பாத்திருத்திருக்கிறார்கள் படக்குழுவினர். ஆனாலும் முயற்சி பாராட்டுக்குரியது.

# வெந்து தணிந்தது காடு

## புழுதியில் எறியப்பட்ட வீணை

திருச்செந்தூரின் செங்காட்டு பூமியின் அப்பாவி இளைஞன் மும்பையில் நடக்கும் எதிர்பாராத திருப்பங்களால் தனது அப்பாவித்தனத்தை இழந்தால் அதுவே 'வெந்து தணிந்தது காடு'.

திருச்செந்தூரின் செம்மண் காடுகளில் தாய், தங்கையுடன் கருவேல மரங்களை கொண்டு வாழ்க்கை நடத்தி வரும் முத்துவீரன் (சிலம்பரசன்), ஓர் அசாதாரண சூழலில் சொந்த ஊரான நடுவக்குறிச்சியில் இருந்து இடம் மாறுகிறார். சில தடைகளை தாண்டி பிழைப்புத் தேடி மும்பைக்கு செல்லும் அவர், விடுதி ஒன்றில் அடைக்கலம் தேடிக்கொள்கிறார். அந்த விடுதியில் நடக்கும் வேறு சில சம்பவங்களிலிருந்து விலகி நிற்க முற்படும் முத்துவை மும்பை நகரம் எப்படி பரிணமிக்கவைக்கிறது







என்பது மட்டுமில்லாமல், விருப்பமில்லாத வாழ்க்கையில் இருந்து தப்பித்தாரா இல்லையா என்பதே 'வெந்து தணிந்தது காடு' படத்தின் மீதிக் கதை.

தென் தமிழகத்தின் மணல் காடுகளின் வெப்பத்தில் தகிக்கும் 21 வயது இளைஞனாக அறிமுகம் கொடுக்கும் சிம்பு, நடுவக்குறிச்சி என்னும் சிற்றூரில் வசிக்கும் இளைஞனுக்கே உரித்தான உடல்வாகுக்கு ஏற்றுவாறு உடலை உருக்குலைத்து மெனக்கெட்டுள்ளார். வழக்கமான அவரது நடிப்பு அடாவடிகள் இல்லாத முற்றிலும் வித்தியாசமான, புதுமையான சிம்புவாக ரசிகர்களுக்கு விருந்தளித்துள்ளார்.

தூத்துக்குடியின் வட்டார வழக்கை பேசுவதில் தொடங்கி, அப்பாவியாக காதலியிடம் வயதைச் சொல்வது என முத்துவீரனாக மிளிர்ந்துள்ளார். எளிய வீட்டில் வசித்தாலும் தன்மானத்தை விட்டுக்கொடுக்க மனமில்லாமல் 'கையை மீறி போனா கறுக்கு அருவா' போன்ற வசனம் பேசுவது, உச்சக் காட்சியில் மிகச் சிறப்பான நடிப்பை வெளிப்படுத்தியது என சிம்பு தனது வரவை (மாநாடு படத்துக்கு அடுத்ததாக) அழுத்தமாக பதித்துள்ளார்.

கதாநாயகியாக சித்தி இத்னானி, கௌதம் மேனனின் வழக்கமான காதல் நாயகியாக வலம் வருகிறார். டூயட் இல்லாத காட்சிகளில் நிறைய வருவதால் இத்னானியின் பாத்திரம் பெரிய அயர்ச்சியை கொடுக்காமல் கடந்து செல்கிறது. சிம்புவின் தாயாக ராதிகா சரத்குமார். முள்காட்டில் சிக்கிக்கொண்ட மகனின் எதிர்காலத்தை நினைத்து உருகும் அம்மாவாக சில காட்சிகளே வந்தாலும் தனது பணியை கச்சிதமாகச் செய்துள்ளார். இவர்களைத் தவிர, மலையாள சினிமாவின் குணசித்திர நடிகர்கள் சித்திக், நீரஜ் மாதவ் மற்றும் அப்புக்குட்டி, ஜாபர் சாதிக் என மற்றவர்கள் தேவையறிந்து படத்தின் ஓட்டத்துக்கு பயன்பட-த்தப்பட்டுள்ளனர்.




படித்த படிப்புக்கு ஏற்ற வேலை இல்லாததை நினைத்து வருந்தும் இளைஞனாக சிம்புவுடன் தொடக்கக் காட்சியுடன் விரியும் 'வெந்து தணிந்தது காடு' முதல் பாதி புலம்பெயர் தொழிலாளர்களாக திருநெல்வேலி, தூத்துக்குடியில் இருந்து மும்பை சென்றுள்ளவர்கள் சந்திக்கும் இன்னல்களை தேவையான டீட்டெயிலிங்குடன் சொல்லி, நடுவக்குறிச்சி என்ற குக்கிராமத்தின் வெப்பத்தை போலவும், நிலத்தை போலவும் சிறு கதையாக ரசிக்க வைக்கிறது. இடைவேளைக்கு முன்பாக படத்தின் ஆன்மா வெளிப்படுகிறது. எழுத்தாளர் ஜெயமோகனின் கதையை ஒரு சிறிய சிங்கிள் ஷாட் சண்டைக் காட்சி மூலம் சொல்லி ஹைப் ஏற்றிய கௌதம் மேனன், அதே ஹைப்பை இரண்டாம் பாதியில் ரசிகர்களுக்கு கடத்துவதில் தவறுகிறார்.

இரண்டு குழுவுக்கு இடையேயான மோதலாக மாறும் இரண்டாம் பாதி, அதில் அழுத்தம் இல்லாத திரைக்கதை அமைப்பால் தடுமாறுகிறது. முத்துவீரனின் பாத்திரத்தை முன்னிலைப்படுத்த முயன்று, அவருக்கு நிகரான டான்களாக வரும் இருவரின் பாத்திர வடிவமைப்பை குறைத்துள்ளது கதையின் ஓட்டத்துக்கு தடையாக அமைந்துள்ளது. நாயகன் போன்ற மும்பையின்

**76**

**ஐயங்கொண்டான் சுவாமிகள்**

# எமையறிதல்

செய்யும் தொழில் நேர்த்திவழி பிறரும் பயன்பெறத்தக்க வழிகள் எதுவுமில்லையா? செய்கிற கருமம் மீதாக பற்று வைத்து வினைத்திறனோடு அதனைச் செய்வதைவிடுத்து அதனாலெழும் ஒருவித அமைதியை அனுபவிக்கத் தெரியாமல் ஓய்ந்து, ஒதுங்கியிருப்பது மனதுக்கு அமைதியைத் தரும் என்பதானது சுயபுத்தியுள்ள ஒருவனால் எண்ணிச் செய்யப்படும் ஒரு செயலாகுமா?

சரி துறவு என்கிற ஒன்று சரியானதென்றே கொண்டாலும் அது அமைதியைத் தருமா? ஒதுங்கியும் ஒதுக்கியும் வாழ்கின்ற வாழ்வினது சாரம் என்ன? அங்கே எந்த இடத்தில் அவனது அமைதியை அவன் கண்டடைவான்? அவனிடம் யதார்த்தத்தில் உள்ள ஒரிடம் ஏதென்றறியாத நிலையில் அந்த இடத்தை எப்படித்தான் கண்டடைவான்? துறவு என்பதே சிக்கலுக்குள் சென்று மாள்வதற்கான வழிதான்.



ஒதுங்குதல் என்பதே இவ்வுலகில் மாயப்புள்ளிதான். பிறரோடு எதுவித தொடர்புமற்றிருத்தல் என்பதானதே ஒருவிதமான ஏமாற்றுத்தான் என்பதே யதார்த்தமானது. தனியன் என ஒருவன் இருக்க முடியுமா? ஏதோ ஒரு சில வழிகளிலாயினும் யாராவதொருவனுடனாவது தொடர்பு களறுத்து ஒதுங்கியிருத்தல் என்பது சாத்தியமேயற்றதுதான். அப்படியிருக்கையில் தங்கியிருத்தல் தங்கவைக்கப்படல் என்பன சாதாரணமாகவும் இயல்போடும் நிகழவே செய்யும்.

அப்படியானதொரு சூழலானது பரஸ்பரம் ஒரு எதிர்பார்க்கை நிலையை தன்னியல்பாய் ஏற்படுத்திவிடுகிறது. இதனை எவராலும் மறுக்கமுடியாது. அந்த எதிர்பார்ப்பு அன்பாய், ஆதரவாய், அரவணைப்பாய், பாசமாய் என ஆகிவிடாதா? அப்படி ஆகுவதில்லை என்றால் அவர்களுக்கிடையே இருக்கிற தொடர்பு வெறும் நடிப்புத்தானா? நடிப்பு என்பதற்கப்பால் போலியானது தானா? அப்படியாயின் போலியிருந்து பெறத்தக்க சாரம் அல்லது விளைவு எப்படி அமைதியைத் தரும்?

யாரும் வேண்டாம் என எண்ணுகிற எண்ணமுடிகிற ஒருவன் யதார்த்தத்திலிலிருந்து வெளியேயான கடவுள் என்கிற கற்பிதத்தையல்லவா

தாதாக்கள் படங்கள் இதற்கு முன்பு தமிழ் சினிமாவை புரட்டிப் போட்ட படங்களாக அமைந்துள்ளன. அவற்றுக்கான அடித்தளம் தாதா பாத்திரத்திற்கான தெளிவான பார்வையும், அதற்கான அரசியலும், திரைக்கதையும். ஆனால், இங்கு இரண்டு தாதாக்கள் அதிலும் மலையாள சினிமாவின் மூத்த நடிகர் சித்திக் போன்றோரை வைத்துக்கொண்டு அவருக்கான வலுவான திரைக்கதையை கொடுக்காமல் வீணடித்திருக்கிறார் இயக்குநர் கௌதம் மேனன்.

சிம்புவின் குருவாக வரும் தாதா பாத்திரம் மோசமான சித்தரிப்பாகவே உள்ளது. ரசிகர்களை சோதிக்கிறது. இவர்களுக்குள்ளான சண்டை ஏன் என்பதைக்கூட தெளிவாகச் சொல்லவில்லை. இயக்குநர் கௌதம் தனது வழக்கமான டச்சுடன் காதல் காட்சிகளை ரசிக்கும்படியாக அமைத்திருக்கிறார். உதாராணமாக நாயகி எனக்கு 25 சொல்லும்போது எனக்கு 21 தான் என சிம்பு சொல்வது விண்ணைத் தாண்டி வர-வாயா படத்தின் நினைவலைகளை ஏற்படுத்துகிறது. என்றாலும், காதல் காட்சிகளை கதையின் ஓட்டத்துக்கு ஏற்றவாறு கோர்வையாகச் சொல்லாமல், இடையிடையே ஒரு கடமையாக வந்து சொல்லப்பட்டுள்ளது அயர்ச்சியைக் கொடுக்கிறது.

'நிலம்தான் இங்க பொண்ணு மாதிரி, நிலத்தை மீட்கிறது, பறிக்கிறதுதான் இங்க நடக்கிற மோதல்' என வசனங்கள் வைத்துவிட்டு, நில அரசியல் அங்கு யாருக்கு எதிராக செய்யப்படுகிறது என்பதை தெளிவில்லாமல், மலையாளம் மற்றும் தமிழ் பேசும் இரு குழுக்களுக்கு இடையேயான விரோதமாக சொல்லியிருப்பது போன்ற கவனக்குறைவுகள் இரண்டாம் பாதியில் ஏராளம்.

படத்தின் பெரிய ஆறுதல் சிம்புவின் நடிப்போடு 'மறக்குமா நெஞ்சம்', 'மல்லிப்பூ' போன்ற பாடல்களால் வருடும் ரஹ்மான் இசை, ஆண்டனியின் படத்தொகுப்பு போன்றவை மற்ற ஆறுதல்கள். படத்தின் தொடக்கத்தில் இருந்து இறுதி வரை தூத்துக்குடியின் மண் மணம் மாறாத வட்டார மொழியுடன், நல்ல வசனங்களும் கவனம் பெறுகிறது.

மிகவும் யதார்த்தமாக சென்ற முதல் பாதி போல், இரண்டாம் பாதியையும் தெளிவான விவரங்களுடன் சொல்ல வந்தவையை கச்சிதமாகச் சொல்லியிருந்தால் 'வெந்து தணிந்தது காடு' தமிழ்ச் சினிமாவின் தவிர்க்க முடியாத படமாக களமாடியிருக்கும். ஆனால், பல குறைபாடுகளுடன் ஆன்மா இல்லாத தாதா கதையாகவே மனதில் நிற்கத் தவறியுள்ளது.

அடைய முயல்கிறான். இது எந்த வகையில் நியாயப்படுத்தப்படலாம்? அப்படியாயின் யதார்த்தத்தில் இருக்கிற பௌதீகத் தன்மைகள் நிறைந்தவற்றில் நம்பிக்கையீனம் கொள்கிறானா? கற்பனையில் சஞ்சாரம் செய்வதுதான் அமைதியைத் தருமா? கற்பனையில் அனுபவிக்க முடிந்தால் அதற்குத் துறவு என்கிற கவசம் எதற்காக? அது ஒரு வசதியான மறைப்பா?

அவ்வாறான ஒரு துறவானது பிறருக்கு எப்படிப் பயனுடையதாகும்? நான் கற்பனையில் சஞ்சாரம் செய்து பட்டினியில் உயிரிழப்பதுதான் மோட்சமா? அப்படிப் பட்டினி கிடப்பதால் எஞ்சும் என்னுடைய பங்கு உணவை பிறனொருவன் பெற்று பசியாறுவானாயின் பறவாயில்லை. அப்படியாயின் 'என்னுடைய உணவைப் பகிர்ந்து உண்ணுங்கள் உடமைகளையும் அவ்வாறே பகிருங்கள்' எனக் கூறிவிட்டு உயிரை மாய்த்துக் கொள்ளலாமே? அவ்வாறு சத்தமின்றிச் சாதிப்பதற்குப் பதிலாக துறவு என்கிற வேடத்தை ஏன் அணிந்து கொள்ளவேண்டும்?

வாழுதல் என்பது அனுபவித்தலின் மீது கட்டப்பட்ட கோபுரம்தானே? இன்பமென்றும் துன்பமென்றும் கற்பனைப் பிரிகோட்டு வழி பிரிக்கப்பட்ட கற்பனைத் தளங்களில் உயிர்கொண்டு உலவுவதை கட்டுப்படுத்த முடியுமா? முடியுமெனவோ முடியாதெனவோ எண்ணிக்கொள்கிறோம். முன்னர் பல தடவைகள் பேசியபடி அவ்வாறான வாழ்க்கையை எமக்கு வெளியேயான கற்பனைப் பண்டங்களில் சார்புநிலைப்படுத்தி தன்னிலையிழந்து அலைகிறோம். ஆறஇருந்து நேரமொதுக்கி சுயசார்பு நிலையில் மட்டுமே நின்று ஆராய்கிறோமா?

எதையும் ஏலவேயிருக்கிற நம்புகிற கற்பனாச் சட்டகங்களுக்கூடாகப் பார்க்கிற நிலைமை இருக்கிறவரை அது தொடரப்படும்வரை 'நான்-' என்கிற யதார்த்தமும் அதனது இயலுமைகளும் உணரப்படமுடியாத நிலையே தொடரும். யதார்த்தமாயுள்ள நானும் எனக்குள்ளேயே குடியிருக்கும் நானும் ஐக்கியப்படும்வரை நிலையாதல் என்பது விலகியபடியே சென்றுகொண்டிருக்கும். வேறு வழிகள் தென்படாதேயிருக்கும். நிலையாதல் என்பதும் ஒரு வகைப்பட்ட துறவா? நிலையானது என்று குறிப்பிட்டு வடிவம், குணம், பண்பு என கருதக்கூடிய தான ஏதும் உள்ளனவா?

இறைவனுடன் ஐக்கியப்படுதல் என்று குறிப்பிடப்படுகின்றதுதான் நிலையானதா? நிலையாமை என்பதை ஐயமற உணர்தலே துறவிற்கான திறவுகோல் என்கிறார்களே? அது என்ன? நிலையாமையை உணர்ந்து ஏற்று இறை சங்கமம் என்கிற நிலைபேறு நிலையை அடைதல் என்பதான கூற்றுகளினது பெறுமானம்தான் என்ன? நிலையாமை என்றும் நிலைபேறு என்றும் ஒரே வாயால்தானே சொல்லித்திரிகிறோம்? எது உண்மை? எது பொய்? சிந்திப்போம்.



கதிரேசன் காத்தவராயன்

# இப்பிடியுமிருக்குமோ?

'காதோடை காதாய்க் கதைக்கிறதுக்கே வாய் கூசுகுது கதிரேசு... காலங் கிடக்கிற கிடையைப் பாத்தியோப்பா?' எண்டார் வல்லியம்மான். முகங் கொஞ்சம் கடுகடுப்பாயிருந்துது. 'கதிரேசண்ணை ஒரு பக்கத் தாலையெண்டான்னை இதமான கதையொண்டுமல்லே காதிலை விழுகுதில்லை... உங்களுக்குத் தெரியாததுகளே?' எண்டார் தம்பர்.

'உண்மைதான்ரா தம்பு...' எண்டு வல்லியம்மான் ஏதோ சொல்லத் தயாராகிற நேரம் சம்பரும் முருகேசரும் வந்து இருந்துகொண்டினம். வல்லியம்மான் கொஞ்சம் நிமிந்து இருந்துகொண்டு 'பேப்பருகளிலை பாத்தால் நாங்கள் இருக்கிறது எங்கையெண்டல்லே யோசிக்க வேண்டிக்கிடக்குது?' எண்டு பெருமூச்சொண்டை விட்டார். 'அம்மான் சொல்லுகிற விசயங்களைப்பற்றித்தான் கதைச்சபடி வந்தனாங்கள்... எங்கை போய் ஆரிட்டை சொல்லியாறுகிறது?' எண்டார் சம்பர்.

'வீட்டுக்கையே பொம்பிளைப் பிள்ளையளைப் பாதுகாக்க முடியாத காட்டுமிறாண்டிச் சமூகமாயல்லே மாறியிருக்கிறம்... ?' எண்டு தொடந்து சொல்லுறது என்னண்டெண்டு நிப்பாட்டினன். 'எல்லாருமல்லே குற்றவாளியளாயிருக்கிறம்... ஒரு சந்தேகத்தை அல்லது அவதானிச்சதை உரியவைக்குச் சொல்லுறதுமில்லைக் கேக்கிறதுமில்லை... தனித்தனி உலகமாயல்லே ஆகிப்போனம்...' எண்டு முருகேசர் புலம்பிறமாதிரியான ஒரு தொனியிலை சொன்னார்.

'உண்மைதானே உது... என்ரை பெடிபெட்டையளைப் பற்றி சொன்னா எனக்குக் கோவம் வருகுது... உன்ரை பிள்ளையைச் சொன்னா நீ சண்டைக்கு வாறாய்... ஆரை ஆர் திருத்துறது?'' எண்டார் சம்பர். 'அதுக்குள்ளை பெடி பெட்டையள் கெட்டுப்போறதுக்கான வழியள் தாராளமாய்க் கிடக்கு .... எனி கவனிக்கக்கூடின ஆக்களெண்டும் இல்லையில்லோ?' எண்டு நான் சொல்ல 'விருப்பமும் இல்லையல்லோ?' எண்டார் முருகேசர்.

'திருத்த வேண்டின இடங்கள் சரியான நேரத்திலை கவனிக்காமல் விட்டிட்டு காலங்கடந்து மற்றவையிலை பழியைப் போடுறதும் சமூகம் கெட்டுப்போனதுக்கு ஒரு பக்கமான காரணமல்லே?' எண்டார் சம்பர் அங்காலையிஞ்சாலை பாத்தபடி. அந்த நேரம் சுதனும் இன்னொரு பெடியும் வந்தினம். 'கதைக்குள்ளை பூந்து குழப்பிப்போட்டம் போலை?' எண்டுகொண்டு இருந்தாங்கள் ரண்டுபேரும்.

'நாட்டையே குழப்புகிறம் போலையெண்டு கேட்டிருந்தால் ஓமெண்டு சொல்லியிருப்பன்...' எண்டு பிலத்தாச் சிரிச்சார் வல்லியம்மான். அவங்களோடை நாங்களும் சிரிச்சம். 'ஏன் அம்மான் நாங்கள் அப்பிடி என்னத்தைத்தான் குழப்புகிறம்?' எண்டான் சுதன். 'நாட்டிலை ஊரிலை நடக்கிறதுகளை பாக்காமல் இருக்கிறதும் ஒரு வகையிலை

# வீரமா முனிவர் பற்றிய குழப்பமான தகவல்கள்

**இராஜமுத்**

தமிழ்ப் பரப்பில் வீரமாமுனிவரென நாமமறிந்தவரான (Constanzo Gioseffo Eusebio - கொன்ஸ்டன்டைன் ஜோசப் பெஸ்கி என வழங்கப்படும்) பெஸ்கி, இத்தாலி நாட்டில், நவம்பர் 8, 1680 இல் பிறந்தவர். இளமையிலேயே இயேசு சபை ஊழியம் செய்யப் பெரிதும் விரும்பி, ரோம் நகரில் உரிய போதனையும் முறையான பயிற்சியும் பெற்ற பின்னர் இடர்மிகு கடற்பயணம் மேற்கொண்டு இந்தியா (கோவா) வந்து சேர்ந்து தமிழகம் அடைந்தவர்.



மதுரை திருச்சபையில் ஒன்றி, 'தைரியநாதசாமி'யாக, இயேசு சபை ஊழியம் தொடங்கிக் கால்கொண்டு நின்று - சமய ஊழியத்தோடு அளப்பரிய தமிழ்த்தொண்டும் ஆற்றி - இன்றளவும் நினைந்து போற்றப்படுகிறவர். இருப்பினும், அவரது வரலாற்றுத் தகவல்களில் இன்றுவரை பல குழப்பங்கள் வளர்ந்து தொடர்கின்றன.

இத்தாலியில் பிறந்த பெஸ்கியின் பிறந்த ஆண்டு (1680) விவரங்குறித்து மாறுபாடான செய்திகள் இதுவரை இல்லை. ஆனால், தான் விரும்பிய பணி செய்யப் பெஸ்கி எப்போது இந்தியா வந்தடைந்தார்? என்பதிலிருந்து தொடங்கினால் அவர் என்று? எங்கு இறுதியடைந்தார்? எங்கு அவரது கல்லறை அமைந்துள்ளது? என்பன தொடர்பான வரலாற்றுக் குறிப்புகள் மாறுபட்ட விவரங்களை வழங்கிக் குழப்பங்களை ஏற்படுத்தி வருகின்றன.

இக்கட்டுரையில் இனி விரிவாக விவாதிக்குமுன் எடுத்துக்காட்டுகளாக:- வீரமாமுனிவர் இந்தியா வந்தடைந்த ஆண்டு என 1700, 1707, 1710, 1711 என்றும்; அவர் இறுதியடைந்த ஆண்டு 1740, 1742, 1746, 1747 எனவும்; அவர் தமிழ்நாட்டில் இறுதியடைந்தார், இல்லை கேரளத்தில் இயற்கை எய்தினார் என மாறுபட்டும், அவர் மறைவடைந்த இடம் காயல்பட்டினத்துக்கருகே அம்பலக்காடு, மணப்பார் (மணப்பாடு) என்ற இடங்கள் சுட்டியும்; அவருடைய கல்லறை இருக்குமிடங்களாக அம்பலக்காடு, திருச்சி, மணப்பாறைக்கருகே மலையடிப்பட்டி என்ற கிராமக் கிறிஸ்துவ ஆலயம் எனவும் உறுதிப்படுத்தாத தகவல்கள் உலவிவருகின்றன.

மேலும் அவர் தமிழகத்தில் பணியாற்றியது அவரது சபை ஊழிய காலத்தில் நிகழ்ந்தவையாகக் குறிப்பிடப்படும் செய்திகள். திருச்சியை ஆண்டு வந்த சந்தா சாகிப்புடன் அவர் நட்புறவாக இருந்ததுடன், அவரது திவானாக இருந்தது குறித்தும் அவரது வாழ்க்கை - உணவுப்பழக்கம், உடை, சமயப் பரப்புரைப் பயண நடைமுறைகள் அவர் படைத்தளித்ததாக நாம் போற்றிவரும் நூல்கள் முதலியன குறித்த பல முக்கியமான வாழ்க்கை வரலாற்று விஷயங்களிலும் ஒருமையில்லா நிலை அடர்ந்திருக்கிறது. வீரமாமுனிவரைச் சமயம் கடந்து பலரும் போற்றுவதற்கான முதன்மைக் காரணமே அவர் தமிழுக்குப் படைத்தளித்துள்ளதாகப் பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும் - 'ஆறுநூற்று மூவைம்பூக்களால்' கோர்க்கப்பட்டிருக்கும் வாடாத் தமிழ் மாலையான தேம்பாவணி உள்ளிட்ட 25 இலக்கிய, இலக்கண நூல்களாகும்.

இந்த முதன்மை அடிப்படையையே இடித்துத் தகர்க்கும் கருத்தில், தமிழிலக்கிய வரலாற்றை நூற்றாண்டுகளாகப் பகுத்து விரிவாகவும் முன்னோடியாகவும்

---

குழப்பங்களுக்குக் காரணமாயல்லே போகுது?' எண்டு நிப்பாட்டினார் முருகேசர்.

'உண்மைதான் மாமா... எனக்கெண்டு ஒண்டு நடக்கிற வரைக்கும் பாத்தும் பாக்காத மாதிரித்தானே விட்டிட்டு இருக்கிறம்... பாத்ததை தீர்க்கிற வழியளை சிக்கலாக்கி வைச்சிருக்கிறம்... அதுக்கான பொறுப்புகளையும் அதிகாரங்களையும் மாத்தி வைச்சிருக்கிறம்...' எண்டு சங்கடப்பட்டான் சுதன்.

'பொறுப்பெடுக்கிறவையை வடிவாய் செய்ய விடுகிறமோ? அதுவும் இல்லை.. விடுப்புப் பாக்கிறது, விமர்சிக்கிறது, கூடிக்கதைக்கிறது இதுகள் ஒரு சமூகத்தைக் காப்பாற்ற உதவுமோ?' எண்டான் பெடியன்.

'இப்ப உதுகளை இதிலை இருந்து கதைக்கிற நாங்களுநம் பிழைகாறர் எண்டுறீரோ?' எண்டு திடுக்கிட்டுக் கேட்டார் தம்பர். 'ஓஓ... பின்னையென்ன... தட்டிக்கேட்டுச் சண்டை பிடிக்க வேண்டின ஆக்களல்லே நாங்கள்? அதைச் செய்யிறமோ?' எண்டார் முருகேசர்.

'கதைச்சாலே குழப்பவாதி எண்டிறாங்கள்... என்னத்தைச் செய்யிறது?' எண்டார் சம்பர்.

'அப்பிடிவா சம்பு... கெடுகிற வழியளை ஊக்குவிக்கிற ஆக்களைக் காவித்திரிய மட்டும் முடியுதாக்கும்?' எண்டு கொண்டு வல்லியம்மான் எழும்பினார். 'பார்லிமென்ரிலை உதுகளுக்கு லைசென்ஸ் குடுக்கிற கதையள் அடிபடுகுது... பாக்க வேறை வேலையில்லாத ஆக்களை அனுப்பின நாங்கள் இஞ்சை கடிபடத்தான் முடியும்போலை?' எண்டுகொண்டு நானும் எழும்பி வந்திட்டன்.

எழுதி வழங்கியுள்ள மு. அருணாசலம் (1974) தனது ஆங்கில நூலில் 'வீரமாமுனிவர் பெயரில் அறியப்படும், தேம்பாவணி, சதுரகராதி, தொன்னூல் விளக்கம், பரிபூரண குருகதை உள்ளிட்ட அனைத்து நூல்களுமே உண்மையில் சுப்ரதீபர் எழுதியவை' என அதிரடியாக அறியத் தந்தார். இதே கருத்து, முன்னொரு சமயத்தில் கசடதபற (1971) இதழிலும் முன்வைக்கப்பட்டிருந்தது. வலுவான, உறுதியான ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு வீரமாமுனிவர் படைப்புகள் தொடர்பான கருத்துகள் எழுப்பப்படாததால், நிலைத்து நின்று வீரமாமுனிவர் குறித்த ஆய்வுப் பரப்பில் பெரிதும் ஏற்றுக் கொள்ளப்படாமல் சிதிலமடைந்துள்ளன.

நடுநிலை நின்று, தேடித் தீர ஆராய்ந்து, ஆவணங்கள், சான்றுகள் மூலம் வீரமாமுனிவர் குறித்த வரலாற்றுக் குழப்பங்களுக்கான விடைகள் தேடாநிலையே இன்றும் தொடர்கிறது. இதனால் பலரும் பலவாறாகத் தமக்குத் தோன்றிய வகையில் - ஏற்கத்தக்க ஆதாரங்களின் துணையின்றியே - நூல்களிலும் கட்டுரைகளிலும், தகவல் ஊடகங்களிலும், வலைத்தளங்களிலும் கருத்துகளைப் பதிவு செய்து வருகிறார்கள். இவ்விஷயத்தில் காய்தல் உவத்தலற்ற நேர்மையோடு குறிப்பிட உரியதென்னவென்றால், வீரமாமுனிவர் குறித்துத் தற்போதுவரை நமக்குக் கிடைக்கும் செய்திகள் யாவும், மிகப் பெரும்பாலும் அவர் சார்ந்திருந்த கத்தோலிக்கக் கிறிஸ்துவ மத சபைகள் / நிறுவனங்களது ஆவணங்கள், கடிதங்கள், பிற பதிவுகள், சான்றுகள் முதலியவற்றுடன், இந்தியாவிலும் அயல்நாட்டிலுமுள்ள கிறிஸ்துவ ஆய்வாளர்களது நூல்கள், கட்டுரைகள் முதலியவற்றின் வழியாகவே கிடைக்கின்றன. இருந்தும், வீரமாமுனிவரது வாழ்க்கை, பணி விவரங்களில் உறுதியும் நேரொருமையுமின்றி மாறுபட்ட தகவல்கள் பரவிக்கிடக்கின்றன என்பது நெருடலாக உள்ளது.

வீரமாமுனிவர் தனது மதப்பிரிவான கத்தோலிக்கக் கிறிஸ்துவப் பரவலுக்குப் பல இடர்பாடுகளை எதிர்கொண்டு மும்முரமாகப் பணியாற்றியதால், புராட்டெஸ்டண்ட் கிறிஸ்துவப் பிரிவினரும், அவர்களைவிட அதிகக் காட்டமாக லுத்தரன் பிரிவினரும் பெஸ்கி குறித்து மாறுபட்ட, வெறுப்புமிழும் தகவல்களையும் பதிவுகளில் நிறுத்தியுள்ளனர். இவை தவிர்த்துப் பிற சமயத்தாரால் படைக்கப்பட்ட வீரமாமுனிவர் குறித்த நூல்கள், ஆய்வுகள் மிகச் சிலவே கிடைக்கின்றன.

அயல் மண்ணிலிருந்து வந்து, தாம் மேற்கொள்ளும் சமயப் பரவல் செய் பணிக்கு இம்மண்ணின் மக்கள் பேசும் மொழிவாயிலாக அணுகுவதே உசிதமானது என்பதைத் தெளிவுற உணர்ந்தார் தைரியநாதர். ஆர்வமுடன் முயன்று, தமிழ் கற்றுத் தமிழுக்குப் பலவகைப்பட்ட அரிய, 25 நூல்கள் வழங்கித் தமிழ்வளத்தைத் தனக்கியன்ற வரை பெருகச்செய்துள்ளவரான வீரமாமுனிவரது வாழ்க்கை தொடர்பான ஆதாரம் நிறை செய்திகளும் ஏற்கத்தக்க உண்மையான ஆவணங்களும் உரியவாறு பாதுகாத்து வைக்கப்படவில்லை. பிற்காலத்தில், 'தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை' என்று முழங்கிய பாவேந்தரின் உறுதிப்பாட்டை அவர் சார்ந்த மதத்தவர்களும், அவர்களைப் போலவே தமிழுலகும் முற்றாகச் செயல்படுத்தவில்லையே என்பது பெரும் ஆதங்கமாக நிற்கிறது.

மாறுபட்டுப் பரவிக் கிடக்கும் வீரமாமுனிவர் வரலாறு குறித்த விவரங்களைக் காண்போம். தமிழில் முதன்முதலில் (1822 & மறுபதிப்பு 1836) அச்சேறிய மிகச் சுருக்கமான 'வீரமாமுனிவர் சரித்திர வரலாறு' எழுதிய அ. முத்துச்சாமிப் பிள்ளை, வீரமாமுனிவர் வாழ்ந்த காலத்தை 1680-1742 என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், அவரே தனது நூலின் முற்பகுதியில் வைத்துள்ள வீரமாமுனிவர் (Father Beschi) படத்தின் கீழ் (Father Beschi's life by Rev. L. Bessel, S.J என்று குறிப்பிட்டுள்ள ஆங்கில நூலிலிருந்து) எடுத்தாண்டுள்ளதாகக் காட்டியுள்ள சிறு குறிப்பில் -

"... ... பற்பல நூல்கள் இயற்றி 4-2-1747ல் கடவுள் திருவடி நீழலில் அம்பலக்காட்டில் - இன்புற வதிந்த பெரியார்" எனத் தமிழ்ப்படுத்திக் குறிப்பிடப்பட்டுள்ளது.

முத்துச்சாமி பிள்ளையோ, வீரமாமுனிவர் மறைந்தது 'மணற்பாடு' என்ற ஊரென்கிறார்; மறைந்த ஆண்டு 1742 என்கிறார். ஆனால், அவரே - மறுப்புக் குறிப்பு எதுவும் தனது நூலில் வைக்காமல்- வீரமாமுனிவர் படத்தின் கீழ் எடுத்தாண்டுள்ள - ஆங்கிலத்தில் முதன்முதலில் எழுதப்பட்ட பெஸ்கியின் வாழ்க்கை வரலாற்று நூலான - பெஸ்ஸியின் (Fr.L. Besse,,1918) நூல் செய்தியோ, வீரமாமுனிவர் மறைந்தது அம்பலக்காடு என்னும் ஊர்; மறைந்த ஆண்டு 1747 என்கிறது.

வீரமாமுனிவர் குறித்த வரலாற்றுப் பதிவுகளின் ஆரம்ப காலத்தைச் சேர்ந்த இவ்விரண்டு முதன்மை ஆதாரங்களையும் நோக்குமிடத்தில் வீரமாமுனிவர் வாழ்க்கை வரலாற்றுக் குழப்பங்கள் இங்கிருந்தே தொடங்குகின்றன எனலாம். வீரமாமுனிவர் குறித்த முதல் தமிழ் நூலான முத்துசாமிப் பிள்ளையின் நூலில் பல தவறான செய்திகள் நிறைந்திருப்பதாகப் பின்னர் (1996-ல்) வெளிவந்த 'வீரமாமுனிவர் தொண்டும் புலமையும்' என்னும் நூலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதையும் கருத்தில் நிறுத்தி மேற்செல்வோம்.

**நடுநிலை நின்று, தேடித் தீர ஆராய்ந்து, ஆவணங்கள், சான்றுகள் மூலம் வீரமாமுனிவர் குறித்த வரலாற்றுக் குழப்பங்களுக்கான விடைகள் தேடாநிலையே இன்றும் தொடர்கிறது.**

வீரமாமுனிவர் குறித்துக் கிறிஸ்து மத நிறுவனங்கள் வழங்கும் தகவல்களும் மாறுபட்டு நிற்கின்றன. ஹெரிட்டேஜ் வேம்பாறு (Heritage Vembaru) எனும் தகவலமைப்பு, பெஸ்கி 'இந்தியாவில் தனது முப்பதாண்டுப் பணிக் காலத்திற்குப் பின் தமிழ்நாட்டில் 1746ல் இறந்தார்' என்ற செய்தி வழங்குகிறது.

ஆனால், 'கத்தோலிக்க சபை வரலாறு குறித்து அதிகாரப்பூர்வ தகவல்கள் தரும் ஏற்பாடாகத்' தன்னை அறிவித்துக் கொண்டிருக்கும் கத்தோலிக்க என்சைக்ளோபீடியா (Catholic Encyclopedia) பெஸ்கியின் வாழ்வுக் காலத்தை 1680-1746 எனக் குறிப்பிட்டிருந்தாலும், 'அவர் 1744 ல் மணப்பார் மிஷன் ரெக்டராக நியமிக்கப்பட்டுப் பணியாற்றி, மணப்பாரில் 1746ல் இறந்ததாக" தகவல் தருகிறது.

தைரியநாதராகப் பணி தொடங்கிய அவரது மதுரை சபை (பின்னாட்களில் டயோசிஸ் Madurai Dioses அந்தஸ் தடைந்தது) அவருடைய வாழ்க்கைக் குறிப்பை 1680-1747 என வழங்குகிறது. தமிழ்நாட்டிலுள்ள பூண்டி மாதா ஆலயம், பெஸ்கி இறைப்பணி செய்த பல ஆலயங்களில்,

பிரபலமாக விளங்கும் ஒரு ஆலயமாகும். இது குறித்த தகவலமைப்பு அதிகாரப்பூர்வமாக வழங்கும் தகவல் குறிப்பு 'இந்த ஆலயத்தை நிர்மானித்த கொன்ஸ்டன்டைன் ஜோசப் பெஸ்கி 1680-1742' என்பதாக உள்ளதையும் குறிப்பிட வேண்டியுள்ளது.

அண்மையில், 'தமிழ்க் கத்தோலிசிசம்' குறித்துச் சிகாகோ பல்கலைக் கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட முனைவர் பட்டத்திற்கான தனது ஆய்வுக்காக இந்தியாவில் பெஸ்கி தொடர்புடைய பல இடங்களிலும் நேரில் சென்று கள ஆய்வு செய்த ஆய்வாளர் (Marghereta Trento, 2022) இயேசு சபை இரங்கல் குறிப்புகளை (Jesuit obituary records) நுணுக்கமாக ஆராய்ந்து, அக்குறிப்புகளின்படி, 'பெஸ்கி, எந்தச் சூழலில் இறந்தாரெனக் குறிப்பிட்டுச் சொல்ல இய லாவிட்டாலும், பிப்ரவரி 4, 1747ல் அம்பலக்காட்டில் மறைவடைந்ததாக முடிவுகொள்ளலாம்' என ஆய்வறிக்கை அளித்துள்ளார்.

வீரமாமுனிவரது இந்திய வருகையிலிருந்தே பார்த்தோமானால், அவரது இந்தியா வருகை '1710 பிற்பால்' என ஆங்கில வரலாற்று நூலாசிரியர் பெஸ்ஸி (Fr. L.Besse, 1818) குறிப்பிட்டுள்ளார். இன்றைக்கு எண்பத்தாறு ஆண்டுகளுக்கு முன்பே 'கிறிஸ்துவமும் தமிழும்' என்ற தலைப்பில் இத்துறையில் முதல் நூலினை ஆக்கம் செய்த தமிழாய்வு அறிஞர் மயிலை சீனி வேங்கடசாமி, பெஸ்கி இந்தியாவுக்கு 1700-ல் வந்தடைந்ததாகக் குறிப்பிட்டுள்ளதோடு, வீரமாமுனிவர் மறைந்த ஆண்டு 1742 என்றும், மறைவடைந்த ஊர் மணப்பாடு என்றும் நூற்பதிவு செய்து வைத்துள்ளார். வீரமாமுனிவர் லிஸ்பனிலிருந்து 1709 ஆம் ஆண்டு கப்பல் வழியாகப் புறப்பட்டு இறுதியாக 1710ல் கோவா வந்தடைந்தார் என்று ஓர் ஆய்வுத் தகவல் உள்ளது. பெஸ்கி 1707-லிலேயே இந்தியா வந்தடைந்துவிட்டதாகவும், அவர் 1742ல் மறைவடைந்ததாக இன்னொரு தகவல் ஒரு பன்னாட்டிதழில் வெளியான கட்டுரையில் காணக் கிடைக்கிறது. வீரமாமுனிவர் இந்தியா வந்தடைந்த ஆண்டுக் குழப்பங்களோடு அவரது மறைவு குறித்தும் தெளிவற்ற தகவல்களே பதிவுகளாகி வருகின்றன என்பதை முன்னருங் கண்டோம். சுருக்கமாக, அவரது மறைவு 1742 என்றும்; 1746 எனவும்; 'இல்லை', அவர் மறைந்த ஆண்டு 1747 என்றும் வீரமாமுனிவர் ஆய்வாளர்கள் மாறுபட்ட நிலைப்பாடுகள் கொண்டிருக்கின்றனர் என்பதை அறிகிறோம்.

இக்கட்டுரையில் முன்னர் குறிப்பிட்டுள்ள முத்துசாமிப் பிள்ளையின் நூலில் முனிவரின் வாழ்க்கை முறை பற்றிய பல தவறான செய்திகள் அடங்கியிருப்பதாக இராஜமாணிக்கம் (1998) நூலில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. மேலும் அதே நூலில், "1742இல் மதுரைப் பணித்தளம் விட்டுச் சென்ற வீரமாமுனிவர், கடற்கரையில் 1745 வரை பணி புரிந்த பின், 1746,-47 ஆண்டுகளைக் கேரள நாட்டிலுள்ள அம்பலக்காட்டில் அமைந்த குருமடத்தில் செலவழித்து, 1747ஆம் ஆண்டு பெப்ருவரி நான்காம் நாளில் தமது 67ஆம் வயதில் உயிர் துறந்தார்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒருசிலர் இவர் மணப்பாட்டில் உயிர் துறந்தார் என்ற குறிப்பினைச் சற்றே திரித்து, திருச்சிக்கருகிலுள்ள மணப்பாறையில் அவர் உயிர் துறந்தார் என்றும் கூறுவதும் காணப்படுகிறது. மணப்பாறைக்கு அருகிலுள்ள மலையடிப்பட்டி என்ற கிராமத்துக் கிறிஸ்துவ ஆலயத்துக்கருகில் வீரமாமுனிவர் அடக்கம் செய்யப்பட்டுள்ளதாக ஓர் இடமும் சுட்டிக்காட்டப்பட்டு வருகிறது. மற்றொரு இடத்தில் கிடைக்கும் தகவலின்படி, அவரது உடலடக்கம் செய்யப்பட்ட இடம் கேரளத்தில் (கொச்சின் சமஸ்தானத்தைச் சேர்ந்த) சம்பலூர் (Sampaloor) என அறியக் கிடைக்கிறது. திருத்தங்களுக்குள்ளாகும் வாய்ப்புகளுள்ள விக்கிபீடியா தகவலின்படி அவர் இறுதி ஓய்வடைந்திருக்கும் இடம் கேரளத்திலுள்ள சம்பலூர் அல்லது தமிழ்நாட்டிலுள்ள மணப்பாடு எனச் சமவாய்ப்புக் காட்டுகிறது.

வீரமாமுனிவர் குறித்து இவ்வாறான மாறுபட்ட கருத்துகள் நிலவ ஒரு காரணம் அப்போதைய கிறிஸ்து மதச் சபையினரிடையே நிலவிய விரிவான பிளவுகளும் அசிரத்தையும் ஆகும், வீரமாமுனிவரது நூல்களை ஓரளவு பாதுகாத்த அளவிற்குக்கூட அவரது வாழ்க்கை விவரங்கள், சமயப் பணி, பயணித்த ஊர்கள், அவர் தமிழ் நாட்டில் தொடர்புகொண்டிருந்தவர்கள் (குறிப்பாக சந்தா சாகிப் தொடர்பு, அவரது திவானாகப் பணியாற்றியது); அவரது செயற்பாடுகளின் காலவிவரங்கள் முதலியற்றைக் கவனம் செலுத்தி ஆவணப்படுத்தாமை பெருங்குறை. முத்துசாமிப் பிள்ளை (தமிழ் 1822, 1836, ஆங்கிலம் 1840) நூலில் வீரமாமுனிவர் - சந்தா சாகிப் நல்லுறவும், சந்தா சாகிப்பின் திவானாக வீரமாமுனிவர் பணியாற்றியதும் விரிவாகப் பேசப்பட்டுள்ளது. ஆனால் அச்செய்திகள் உறுதிப்படுத்தப்படாதவை என ஒதுக்கிவைக்கப்பட்டுள்ளதும் நிகழ்ந்துள்ளது.

இரண்டாவது காரணம் பலரும் தத்தமக்கு எட்டிய நூல்கள் / செய்திகளிலிருந்து - உண்மை ஆராயும் முயற்சிகள் ஒரு சிறிதும் மேற்கொளாது - தயங்காமல் நகலெடுத்து சர்வசகஜமாகப் பரிமாறிவருதலாகும்.

மூன்றாவது காரணமாக உணரப்பட்டு, அதிகம் பேசப்படாமலிருப்பது வீரமாமுனிவர் மிகச் சிறப்பான பணிகளைத் தமது சமயப் பரவலுக்கும் தமிழின் வளம் பெருக்கவும் நிறைவுற ஆற்றியும் கடைசி வரை அவர் ஒரு பாஸ்டராகவே நிறுத்திவைக்கப்பட்டது ஏன் என்னும் வினாவிற்கான விடையில் இருக்கிறது.

கிறிஸ்துவ மதத்திலேயே போட்டிப் பிரிவினர் ( குறிப்பாக லூத்தரன் பிரிவினர்) தூற்றினாலும், வீரமாமுனிவரது செயலாற்றலும் தமிழாற்றலும் மறைக்கப்படாமல் மதிக்கப்பட்டன. ஆனால், அவரது கத்தோலிக்கத் திருச்சபை அவரை எந்த உயர் பொறுப்பிலும் அமர்த்தவேயில்லை. திருச்சபையில் முக்கிய நிர்வாகப் பொறுப்பு ஏதும் அவருக்கு வழங்கப்படவேயில்லை. அவரது திருச்சபை தொடர்பான கடிதங்களும் இயேசு சபை ஆவணக்காப்பகங்களில் (Jesuit Archives) பாதுகாத்து ஆவணப்படுத்தப்படவில்லை. அவர் ஊழியஞ்செய்த கொங்கனாங்குப்பம், ஏலாக்குறிச்சி, பூண்டி, கூட்டங்குளி ஆகிய ஆலய மக்களிடையே அவர் அதிசயங்கள் நிகழ்த்தியுள்ளதாகப் பரவலான செவிவழிச் செய்திகள் வழங்கப்பட்டுவரும் நிலையிலும் வாடிகன் தலைமை அவரைப் புனிதராக அறிவிக்கவோ, வேறுவகை கௌரவம் அளிக்கவோ (Beautification/Canonization) கருதவில்லை.

இதுவரை பற்பல சிறப்புகளைத் தமது பணிவழி பேச வைத்துள்ள வீரமாமுனிவருக்குத் தமிழக மக்கள் சார்பில் அரசு, சென்னை மெரீனாவில் சிலை நிறுவிப் (1968) போற்றி வருகிறது. அவரது திருச்சபை, வீரமாமுனிவருக்கு உரிய சிறப்பு வழங்கக் காலம் கனியுமென நம்புவோம்.

# வாரம் ஒரு சொல்....!

யாழ்ப்பாண மக்கள் மத்தியில் பேசப்படுகின்ற பேச்சு வழக்குத் தமிழ்ச் சொற்கள் பலவற்றைச் செம்மண் ஞாபகப்படுத்த முயற்சிக்கிறது. இத்தகைய சொற்களை முதியவர்களும் கிராமங்களில் வாழும் பூர்வீகத்தினர் சிலருமே இன்றைக்கும் பயன்படுத்தி வருகின்றனர். பிரதேச வாரியாகவும் தொழில் ரீதியாகவும் பண்பாட்டு விழுமியங்களின் வழியாகவும் பேசப்படுபவையாக இவை இருக்கின்றன.

பேச்சு மொழியில் இருந்து வருகின்ற இத்தகைய யாழ்ப்பாணத் தமிழ்ச் சொற்கள் பலவும் தற்போது அருகி வருகின்றன. அதற்குப் பதிலாக ஆங்கிலச் சொற்களும் இந்தியப் பேச்சு மொழிச் சொற்களும் பேசப்படுவது அதிகரித்து வருகிறது. ஆனாலும் யாழ்ப்பாணப் பாரம்பரியப் பேச்சு மொழிச் சொற்களை அழியவிடாது பாதுகாப்பதற்காகவும், நினைவு படுத்துவதற்காகவும் வாரம் ஒரு சொல் என்ற அடிப்படையில் அவற்றை வெளிக் கொணர இருக்கிறோம்.

இவ்வாறான அருகிவரும் சொற்களைச் செம்மண் பத்திரிகைக்கு உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வசிக்கின்ற நீங்களும் அனுப்பி வைக்கலாம். அதற்கான விளக்கத்தையும் - அது எடுத்தியம்பும் கருத்தையும் விரிவாகக் குறிப்பிடலாம். அவ்வாறு அனுப்புவதன்மூலம் எதிர்காலத்தில் இந்தச் சொல்வளத்துக்கான ஓர் அகராதியைத் தயாரித்து அந்தப் பாரம்பரியச் சொற்களைப் பேணவும் தமிழ் மக்களின் பூர்வீகத்தை உறுதிப்படுத்தவும் அடுத்த சந்ததியினருக்குக் கடத்தவும் முடியும்.

இந்தச் சொற்களை அறிமுகப்படுத்துபவர்கள் அந்தச் சொல் எந்த அர்த்தத்தில் பேசப்படுகிறது என்ற கருத்தை முழுமையாகத் தருவதுடன் அது பெயர்ச் சொல்லாகவா அல்லது வினைச்சொல்லாகவா அல்லது எவ்வகைச் சொல்லாகப் பயன்படுத்தப்படுகிறது என்பதையும் குறிப்பிடுவது சிறந்தது - வரவேற்கத்தக்கது. அத்தோடு யாழ்ப்பாணத்தவர்களின் பேச்சு வழக்கிலுள்ள தமிழ்ச் சொற்களை மட்டுமல்லாது மட்டக்களப்பு, வன்னித் தமிழ்ச் சொற்களையும் இந்தப் பகுதியில் குறிப்பிடலாம். அந்தச் சொற்களையும் செம்மண்ணுக்கு அனுப்பி வையுங்கள். இது அருகிவரும் ஈழத் தமிழைக் காக்கும் ஒரு சிறு முயற்சியே.

இந்த வாரச் சொல்

**அங்கால, இங்கால, எங்கால, உங்கால**

**11**

யாழ்ப்பாணப் பேச்சு வழக்கில் திசைகளைக் குறிக்கும் பெயர்ச்சொற்களாக, 'அங்கால, இங்கால, எங்கால, உங்கால'' ஆகிய சொற்கள் விளங்குகின்றன. சொல்பவர் நிற்கின்ற இடத்தைப் பொறுத்தே இவற்றின் அர்த்தம் அமையும். ஆனாலும், 'இங்கால' என்பது தாம் நிற்கும் இடத்திலிருந்து இடப் பக்கத்தையும், 'அங்கால' என்பது வலது பக்கத்தையும், 'உங்கால' என்பது நாம் நிற்பதற்கு எதிராக அல்லது முன்னாலுள்ள திசையையும் பொதுவாகக் குறிப்பதாக அமைகிறது.

'இஞ்சாலை வீட்டுக்காரரோட நாங்கள் கதைக்கிறதில்லை'', 'அங்காலையிருக்கிறதுகள் ஒரே பாட்டும் சத்தமும்தான் பிள்ளைகள் படிக்கக்கூட முடியாது'', ''அந்த மாட்டுக் கன்டு உங்காலையுள்ள வெறும் வளவுக்கைதான் போயிருக்கவேணும்'', ''இதில நிண்ட ரெண்டு பேரும் எங்கால போனாங்கள் என்டு தெரியாது'' என்பவையெல்லாம் திசையைச் சுட்டுவதாகவே அர்த்தப்படுகின்றன.

'இது எங்கால உங்களுக்குக் கிடைச்சது?'' எனக் கேட்பதற்கு வேறு அர்த்தமும் உண்டு. ஒரு பொருளையோ, நகையையோ பணம் கொடுத்து வாங்கும் வல்லமை இல்லாதவர்கள் விலையுயர்ந்த பொருளை வைத்திருந்தால் அவ் வாறு கேட்பதுண்டு, அல்லது களவுபோன ஒரு பொருளைத் தேடி வரும் காவல்துறையினர், ''இது எங்கால உனக்குக் கிடைச்சது'' என்பர்.

விறகுபோன்ற பொருள்களைக் கொண்டு வருபவர்களிடம், ''அதை அங்கால போடு, இங்கால போடு, உங்கால போடு'' என்று கூறுவதுமுண்டு.

பக்கத்திலுள்ள வீடு ஒன்றில் வெளிச்சம், ஆள் அரவமில்லாமல் இருந்தால், 'இஞ்சாலை ஒருத்தரும் இல்லைப்போல, உங்கால ஒருத்தரும் இல்லப்போல, அங்கால ஒருத்தரும் இல்லப்போல'' என்பதுமுண்டு.

ஒரு வீட்டில் இறைச்சிக் கறிபோன்ற ஏதாவது சமையல் செய்து மணத்தாலோ, அல்லது களவு போயிருந்தாலோ இங்கால, அங்கால, உங்கால போன்ற சொற்களைப் பயன்படுத்தி இடத்தைச் சுட்டுவதுண்டு. குறிப்பிட்ட வீட்டுச் சொந்தக்காரரின் பெயரைக் கூறாமல் திசையைச் சுட்டிக் குறிப்பிட்ட வீட்டை அடையாளப்படுத்தவும் இந்தச் சொற்கள் பயன்படுகின்றன. வாகனம் ஒன்றில் செல்லும் போது, ''இங்கால திருப்பு, அங்கால திருப்பு'' என்றெல்லாம் சாரதிக்குக் கட்டளையிடுவதுமுண்டு.

இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.09.2022 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781